# 8

# நிதியியல் துறைச் செயலாற்றமும் முறைமை உறுதிப்பாடும்

*2020 ஒகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட நிச்சயமற்றதும் முன்னொருபோதுமில்லாததுமான பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் உள்நாட்டு நிதியியல் துறை ஒட்டுமொத்த உறுதித்தன்மையொன்றினைப் பேணியிருக்கிறது. வங்கித்தொழில் துறைச் சொத்துக்கள், கடன்களும் முற்பணங்களும் மற்றும் முதலீடுகள் ஒப்பீட்டு ரீதியில் மிதமான விரிவாக்கத்தினை எடுத்துக்காட்டிய அதே வேளையில் சொத்துத்தலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினூடாக முக்கியமாக நிதியிடப்பட்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினூடாக உருவாக்கப்பட்ட தாக்கத்தினை சமாளிக்கும் நோக்குடன் மத்திய வங்கி பல்வேறு வகையான ஒழுங்குமுறைப்படுத்தலில் பொறுத்துக்கொள்ளும் தன்மையை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் வங்கிகள் போதுமான மட்டத்தில் திரவத்தன்மையினையும் மூலதனத்தினையும் பேணுவது இயலுவதாயிற்று. கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்திற்கு மத்தியிலும் அதிகரித்துச் செல்லும் செயற்படாக் கடன்கள், வங்கித்தொழில் துறையின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தினைக் கரிசனைக்குரியதொன்றாக மாற்றியுள்ளது. சொத்துக்களின் தரம் மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் உண்மையான தாக்கம் சட்ட இசைவுத்தாமதம் முடிவுறுத்தப்படுகையிலேயே உணரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வங்கி மோசமாகப் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளெழுச்சிப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை அடையாளம் கண்டு 2020 சனவரியிலிருந்து ஒகத்து வரையிலான காலப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வங்கித்தொழில் துறையினூடாக சலுகை ரீதியான கடன்களை வழங்குவதற்காக அி விசேடமான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. 2020 சனவரியிலிருந்து ஒகத்து வரையிலான காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையில் சொத்துத் தளம், கொடுகடன் மற்றும் வைப்புக்கள் போன்றவற்றில் ஏற்பட்ட சுருக்கம் அதேபோன்று செயற்படாக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, இலாபத்தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக பாதிக்கப்படும் துறையொன்றாக மாற்றமடைந்துள்ளது. இருப்பினும் கூட, ஒட்டுமொத்தமாக துறையின் மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்கள் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலேயே தொடர்ந்தும் காணப்பட்டுள்ள போதும் ஒரு சில தனிப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகவில்லை. நிதியியல் முறைமையிலுள்ள ஏனைய துறைகள் கலப்பான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தன. பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள், கூறு நம்பிக்கைகள், பங்குத் தரகுக் கம்பனிகள் போன்ற துறைகள் மேம்பட்ட செயலாற்றத்தினைக் காட்டிய அதே வேளையில் காப்புறுதித் துறை மெதுவடைந்து காணப்பட்டுள்ளது. முன்னொருபொழுதுமில்லாத நாணயக் கொள்கைத் தளர்வுகளுக்கிடையில் 2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதி முழுவதிலும் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையில் ஒரு மிகையான திரவத்தன்மை தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டமைக்கு பல்வேறு கட்டங்களில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் செய்யப்பட்ட குறைப்பு மற்றும் மத்திய வங்கியால் திறைசேரி உண்டியல்களின் முதலாந்தரக் கொள்வனவுகள் மற்றும் சிறப்புக் கடன் திட்டங்களின் கீழ் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டமை என்பன முக்கிய காரணங்களாக விளங்கின. 2020 மாச்சு நடுப்பகுதியில் கொவிட்-19 தொற்றினைத் தொடர்ந்து தாழ்ந்த மட்டத்திலான ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் பணவனுப்பல்கள் அதேபோன்று அரச பிணையங்கள் சந்தை மற்றும் பங்குரிமைச் சந்தை போன்ற மூலதனச் சந்தைகளிலிருந்தான வெளிநாட்டு முதலீட்டின் வெளிப்பாய்ச்சல் என்பன உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அழுத்தத்தினை உருவாக்கியது. எனினும், இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட வெளிமுகப் பணவனுப்பல்கள் என்பன மீது தற்காலிகமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் சந்தைக்கான விற்றல் மற்றும் வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை என்பனவற்றுடன் சேர்ந்து, இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மிதமான வெளிநாட்டுச் செலாவணி தலையீடுகள் என்பனவற்றின் பின்னர் செலாவணி வீதத்தின் மீதான இவ்வழுத்தம் தளர்த்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இலங்கை ரூபா 2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக மெதுவான தேய்வொன்றினையே பதிவுசெய்தது. சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மை, உபாய ரீதியான வழங்கல் ஏற்பாடுகள் செயன்முறைப்படுத்தப்பட்டமை, ஏலத்திற்கு வலுவளிப்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க உயர்ந்தபட்ச விளைவு வீதத்தினை அறிவித்தமை மற்றும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்களின் முதலாந்தரக் கொள்வனவு என்பனவற்றினை முக்கியமாகப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரச பிணையங்களின் விளைவு வளையி கீழ் நோக்கிய அசைவொன்றினைக் காட்டியது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 2020 மாச்சு நடுப்பகுதியிலும் மே தொடக்கத்திலும் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியிலிருந்து மீட்சியடைந்தது. வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல் தொடர்ந்து காணப்பட்டபோதும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் குறைந்த வட்டி வீதக் கட்டமைப்பில் பங்குரிமை முதலீடுகளை நோக்கி பெயர்வதற்கு முன்னுரிமையளித்தமையின் காரணமாக சந்தை மீட்சிக்கு உதவியது. தொடர்ந்து முன்செல்லும் காலத்தில், நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்துநர்களான மத்திய வங்கி தனிப்பட்ட நிறுவனங்களிலும் அதேபோன்று முறையியல் ரீதியிலும் காணப்படக்கூடிய இடர்நேர்வுகள் பற்றி தொடர்ச்சியாக எச்சரிக்கையுடன் இருப்பதுவும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கு முன்கூட்டிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதும் அவசியமானதாகும்.*

## நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்திகள்

### வங்கித்தொழில் துறை


- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலிலிருந்து உருவாக்கப்பட்ட உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில், வங்கித்தொழில் துறை மிதமான செயலாற்றமொன்றினைக் காட்டியது.** கொடுகடன் இடர்நேர்வுகள் அதிகரித்துச் செல்லும் நிலைமைக்கு மத்தியிலும் 2020 சனவரியிலிருந்து ஒகத்து வரையிலான காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை போதுமான மூலதனம், திரவத்தன்மை மற்றும் ஒதுக்குப் பாதுகாப்பு விகிதம் என்பனவற்றுடன் தொடர்ந்தும் தொழிற்பட்டது. மேலும், பங்கிலாபக் கொடுப்பனவுகள் மற்றும் இலாபங்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது மீதான கட்டுப்பாடுகளினைத் தொடர்ந்து மூலதன விகிதம் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், சட்ட இசைவுத்தாமதத்தின் கீழ் கடன்கள் மீதான வகைப்படுத்தல்கள் முடக்கப்பட்ட போதும், செயற்படாக் கடன்கள் தொடர்ந்தும் அதிகரித்தன. கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கான வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் மற்றும் தொடர்பான கணக்கீட்டு நடைமுறைகள், சட்ட இசைவுத்தாமதக் காலப்பகுதியில் செயற்படாக் கடன்களின் விகிதத்தினைப் பேணுவதற்கு உதவும் என்ற போதும் சொத்துக்களின் தரம் மீதான உண்மையான தாக்கம் சட்ட இசைவுத்தாமதம் நிறுத்தப்படுவதனைத் தொடர்ந்தே உணரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கொடுகடன் சொத்துப்பட்டியலின் கணிசமானளவு சட்ட இசைவுத்தாமதத்தின் கீழ் இருப்பதனால் வங்கிகளின் திரவத்தன்மை மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுவது அவசியமாகும். எனினும், 2020ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கூடாக திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம் விரிவுபடுத்தப்பட்டமை மற்றும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் குறைக்கப்பட்டமை என்பனவற்றின் மூலம் திரவத்தன்மைக்கு ஆறுதல் வழிமுறைகள் வழங்கப்பட்டமையானது குறைந்தபட்ச நியதி திரவச் சொத்து விகிதத்துடன் இணங்கியொழுகுவதற்கு வங்கிகளுக்கு உதவும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவாக தோன்றிய உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் குறைவடைந்த நடவடிக்கைகள் வங்கித்தொழில் துறையின் செயலாற்றத்தினைப் பாதித்தன. ஆகவே, வங்கித்தொழில் துறை பொருளாதாரத்தில் காணப்படும் மெதுவான போக்கு மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்திலிருந்தான நேரடி மற்றும் மறைமுக தாக்கங்கள் என்பன தொடர்பில் மிகுந்த கவனத்துடன் இருப்பது அவசியமானதாகும்.

- **2020 ஒகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருந்தன.** பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் துறையின் மொத்தச் சொத்துக்கள் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் 2.4 சதவீதம் (ரூ.277.8 பில்லியன்) கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.5 சதவீதத்தினால் (ரூ.1.3 ரில்லியன்) ரூ.13.8 ரில்லியனுக்கு விரிவடைந்தது. குறித்த காலப்பகுதியில் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூ.725.6 பில்லியன்), முதலீடுகள் (ரூ.598.3 பில்லியன்) என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பங்களிக்கப்பட்டது. 2020 ஒகத்து இறுதியிலுள்ளவாறு வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளம் முக்கியமாக வைப்புக்களினூடாகவும் (ரூ.10.3 ரில்லியன்) கடன்பாடுகளினூடாகவும் (ரூ.1.7 ரில்லியன்) நிதியிடப்பட்டது. 2018 இறுதியின் 14.6 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 6.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த சொத்துக்களின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி படிப்படியாக மேம்பட்டு 2020 ஒகத்து இறுதியில் 14.6 சதவீதத்தினை அடைந்தது.

- **2018 இறுதியில் 19.6 சதவீதத்தினை அடைந்த ஆண்டிற்கு ஆண்டு கொடுகடன் வளர்ச்சி அதன் பின்னர் மிதமடைந்து 2019 இறுதியில் 5.6 சதவீதத்தினை அடைந்ததுடன் அதன் பின்னர் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் அதிகரிக்கத் தொடங்கி 2020 ஒகத்து இறுதியில் 13.5 சதவீதத்தினை அடைந்தது.** பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் மொத்தக் கடன்களும் முற்பணங்களும் ரூ.725.6 பில்லியன் (8.9 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்து 2019இன் இதே காலப்பகுதியின் ரூ.102.7 பில்லியன் (1.3 சதவீதம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடும் பொழுது 2020 ஒகத்தில் ரூ.8.8 ரில்லியனை அடைந்தது. 2020இன் கொடுகடன் வளர்ச்சி கடன்களின் மொத்த அதிகரிப்பில் 69.3 சதவீதத்திற்கு வகைகூறிய ரூபா (இலங்கை

வரைபடம் 8.1

## நிதியியல் நிறுவனங்களின் முக்கிய பண்புகள் - 2020




மத்திய வங்கியானது கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றினூடாக ஏற்பட்ட பாதிப்புக்களை முகாமைப்படுத்தும் நோக்கில் பல்வேறு ஒழுங்குமுறை மறுகட்டமைப்புக்களை அறிமுகப்படுத்தியது.


2020இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் வங்கித்தொழில்துறையினூடாக கொவிட் - 19 உலகளாவிய நோய்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிநபர்களுக்கும் சலுகைக் கடன்களை வழங்குவதற்கு மத்திய வங்கியானது அதிவிசேட கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது.



வங்கித்தொழில்துறையின் சொத்துக்கள் கடன்களும் முற்பணங்களும் மற்றும் முதலீடுகளில் ஒரு சார்பான மிதமான விரிவாக்கத்தினை காண்பித்திருந்தன. ஒட்டுமொத்தமாக உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மூலதன மற்றும் திரவத்தன்மை மட்டங்கள் ஒழுங்குமுறை குறைந்தளவு தேவைப்பாடுகளுக்கு மேலாக தொடர்ந்தும் காணப்பட்டப் போதிலும் சில உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தளவு மூலதன தேவைப்பாடுகளுக்கு இணங்கியிருக்கவில்லை.

நிதியியல் முறைமையின் ஏனைய துறைகள் ஒரு கலப்பான செயலாற்றத்தினைப் பதிவுசெய்திருந்தன.

வரைபடம் 8.2
வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


துறை கொடுகடன் முக்கியமாக நுகர்வு (18.2 சதவீதம்), கட்டடவாக்கம் (15.6 சதவீதம்), மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் (13.2 சதவீதம்), தயாரிப்பு (10.6 சதவீதம்), உட்கட்டமைப்பு அபிவிருத்தி (9.1 சதவீதம்) மற்றும் வேளாண்மை, கடாக்கம் மற்றும் மீன்பிடி (8.1 சதவீதம்) ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்டன. அதேவேளை, முக்கிய துறைகளில் 2020இன் முதலரைப்பகுதியில் நிதியியல் பணிகள், வர்த்தகம் மற்றும் சுற்றுலா என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் வீழ்ச்சியைப் பதிவுசெய்த அதே வேளையில் ஏனைய முக்கிய துறைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் அதிகரித்தது. அதேவேளை, 2020 ஓகத்து இறுதியில் 25 சதவீதமான செயற்படு கடன்களும் 20 சதவீதமான செயற்படாக் கடன்களும் சட்ட இசைவுத்தாமதத்தினைப் பெற்றன.

ரூபா) கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றின் மூலம் பெறப்பட்டதுடன் இக்காலப்பகுதியில் 7.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றையும் அறிக்கையிட்டது. அரசு (ரூ.354.2 பில்லியன்) மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு (ரூ.197.3 பில்லியன்) வழங்கப்பட்ட கடன்கள் 2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் 76.0 சதவீதத்திற்கு வகைகூறியது. சாதனங்களின் நியதிகளில், முறையே ரூ.4.2 பில்லியனாலும் ரூ.7.3 பில்லியனாலும் வீழ்ச்சியடைந்த கொடுகடன் அட்டைகள் மற்றும் வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான கடன்கள் தவிர்ந்த ஏனைய முக்கிய அனைத்துக் கடன் சாதனங்களும் இக்காலப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. 2020 யூன் இறுதியில் வங்கித்தொழில்

- **2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் முதலீடுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.254.3 பில்லியனுடன் (9.4 சதவீதம்) ஒப்பிடுகையில் ரூ.598.3 பில்லியனாக (19.8 சதவீதம்) காணப்பட்டது.**


- **வங்கித்தொழில் துறையின் விரிவாக்கத்திற்கு வைப்புக்களினூடான நிதியிடல் பெருமளவிற்குக் காரணமாக இருந்ததுடன் இது 2020 ஓகத்து இறுதியில் மொத்தச் சொத்துக்களில் 74.8 சதவீதத்திற்குப் பங்களித்தது.** வங்கித்தொழில் துறையின் வைப்புத் தளம் 12.9 சதவீத வளர்ச்சியுடன் ரூ.1.2 றில்லியனால் வளர்ச்சியடைந்ததுடன் இது, முக்கியமாக ரூபா வைப்புக்களை உள்ளடக்கியிருந்தது. 2020

வரைபடம் 8.3
வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.4
வங்கித்தொழில் துறையின் நிதியிடல் மூலங்கள்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் தவணை வைப்புக்கள் கூடுதலான நிதியினை (ரூ.596.2 பில்லியன்) கவர்ந்த அதே வேளையில் மொத்தத்தில் நடைமுறை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் ரூ.531.7 பில்லியனால் அதிகரித்தன. எனினும், மொத்த வைப்புக்களுக்கான நடைமுறை மற்றும் சேமிப்பு வைப்புக்களின் விகிதம் 2019 இறுதியின் 31.4 சதவீதத்திலிருந்து 2020 ஓகத்து இறுதியில் 32.9 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு நடைமுறை மற்றும் சேமிப்பு வைப்புக்களின் குறைந்த தளமே காரணமாகும். 2020 ஓகத்து இறுதியில் மொத்தக் கடன்பாடுகள் ரூ.1.7 றில்லியனாக விளங்கியது. 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் கடன்பாடுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.142.0 பில்லியன் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.57.1 பில்லியன் கொண்ட அதிகரிப்பினை அறிக்கையிட்டது. இதன் விளைவாக, கடன்பாடுகளில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2019 திசெம்பர் இறுதியின் 4.8 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சியிலிருந்து 2020 ஓகத்து இறுதியில் 7.1 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு அதிகரித்தது. 2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியின் ரூபாக் கடன்பாடுகள் ரூ.29.1 பில்லியன் கொண்ட வீழ்ச்சியை அறிக்கையிட்ட அதே வேளையில் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் ஐ.அ.டொலர் 331.6 மில்லியன் (ரூ.86.2 பில்லியன்) கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

- **துறையின் சொத்துத் தரம் தேய்வொன்றினைக் காட்டியதெனினும் சமாளிக்கத்தக்க மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்பட்டது.** 2020 ஓகத்து இறுதியில் செயற்படாக் கடன்கள் 2019 இறுதியின் ரூ.381.7 பில்லியனிலிருந்து ரூ.481.3 பில்லியனுக்கு ரூ.99.6 பில்லியனால் (26.1 சதவீதம்) அதிகரித்தமையின் விளைவாக செயற்படாக் கடன்களின் விகிதம் 2019 திசெம்பர் இறுதியின் 4.7 சதவீதத்திலிருந்து 2020 ஓகத்து இறுதியில் 5.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2020இன் முதலரைப்பகுதியில் செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு வேளாண்மை துறை தவிர அனைத்து முக்கிய பொருளாதாரத் துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. எனினும், ஒதுக்குப் பாதுகாப்பு விகிதம் 2019 இறுதியின் 52.6 சதவீதத்திலிருந்து 2020 ஓகத்து இறுதியில் 53.8 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு, சிறப்பாகக் குறிப்பிடப்பட்ட மற்றும் குறைந்த தர வகைகளிலிருந்து ஐயத்திற்குரிய மற்றும் இழப்பு வகைகளுக்கு செயற்படாக் கடனின் கீழ் நோக்கிய பெயர்வு உயர்ந்த ஒதுக்கங்களை தேவைப்படுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

வரைபடம் 8.5
வங்கித்தொழில் துறையின் செயற்படாக் கடன்கள்





*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

- **வங்கித்தொழில் துறை குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மேலாகப் போதுமான திரவத்தன்மைத் தாங்கிருப்புடன் தொழிற்பட்டது.** 2020 ஓகத்து இறுதியில் விரிவாக்கப்பட்ட வரைவிலக்கணத்தின் விளைவாக மேலதிக திரவச் சொத்துக்களுடன் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு என்பனவற்றின் நியதி திரவ சொத்து விகிதம் முறையே 38.5 சதவீதமாகவும் 44.4 சதவீதமாகவும் விளங்கின. இவை 20 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளுக்கு மிக மேலாகக் காணப்பட்டன. அதேவேளை, மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 2020 ஓகத்து இறுதியில் 34.5 சதவீதமாக விளங்கியது. வைப்புக்களுக்கான கடன் விகிதம் 2019 ஓகத்து இறுதியின் 88.2 சதவீதத்திலிருந்து 2020 ஓகத்து இறுதியில் 85.5 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 2020 ஓகத்து இறுதியில் வங்கித்தொழில் துறையின் ரூபா மற்றும் அனைத்து நாணயத் திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் என்பன முறையே 272.7 சதவீதத்திலும் 206.7 சதவீதத்திலும் அமைந்து 90 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலே காணப்பட்டன. தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதம் 2020 யூன் இறுதியில் 132.0 சதவீதமாக அமைந்து குறைந்தபட்சத் தேவைப்பாடான 90.0 சதவீதத்திற்கும் மேலாகக் காணப்பட்டது.

- **வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகையின் தேறிய நீண்ட நிலைமை 2019 யூன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2020**

8

வரைபடம் 8.6
வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை நிலைமை





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 8.1 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு உயர்வாக இருந்தமையே காரணமாகும்.** 2020இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட ஐந்தொகையிலுள்ள சொத்துக்கள் அதிகரித்தமைக்கு வங்கிகளில் வைத்திருக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்த அதே வேளையில் ஐந்தொகையிலுள்ள வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் அதிகரித்தமைக்கு வெளிநாட்டு நாணய வைப்புக்கள் முக்கிய காரணமாக அமைந்தன. வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் மற்றும் ஐந்தொகையிலுள்ள வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் இரண்டினதின் சதவீதமாக தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை 2020 யூன் இறுதியில் 0.5 சதவீதமாக விளங்கியது. வங்கித்தொழில் துறை 2019 யூன் இறுதியிலுள்ளவாறான 7.4 பில்லியன் ரூபாவிற்குச் சமமான நீண்ட நிலையுடன் ஒப்பிடுகையில் 2020 யூன் இறுதியில் வங்கித்தொழில் துறை ரூபாவிற்குச் சமமான ரூ.6.3 பில்லியன் கொண்ட நீண்ட வெளிநாட்டு நாணய நிலையொன்றினை அறிக்கையிட்டது. 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீடு மீது ரூ.14.1 பில்லியன் கொண்ட தேறிய இலாபம் அடையப்பட்டது.

- **பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் சந்தை வட்டி வீதங்களில் காணப்பட்ட கீழ் நோக்கிய அசைவு திறைசேரி முறிகளின் மூலதன இலாபங்கள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூ.3.4 பில்லியனிலிருந்து ரூ.7.7 பில்லியனுக்கு அதிகரித்தது.** இதற்கு 2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் அரச பிணையங்களில் முதலீடுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமையே காரணமாகும். வங்கிகளின் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் பங்குரிமைச் சந்தைக்கான வெளிப்படுத்துகை, 2020 ஓகத்து இறுதியில் ரூபா 10.4 பில்லியனாக காணப்பட்டதுடன் வங்கித்தொழில் துறையின் வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட மொத்தச் சொத்துக்கள் மற்றும் முதலீடுகளில் முறையே 0.1 சதவீதமாகவும் 1.4 சதவீதமாகவும் காணப்பட்டமையினால் வங்கித்தொழில் துறையின் பங்குரிமை மூலதன இடர்நேர்வு மிகக் குறைவானதாக இருந்தது.

- **வங்கித்தொழில் துறையின் வரிக்கு முன்னரான இலாபம் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.117.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் ரூ.111.7 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது, ரூ.5.8 பில்லியன் கொண்டதொரு வீழ்ச்சியாகும்.** கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் இலாபம் வீழ்ச்சியடைந்தமைக்கு தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும்

வரைபடம் 8.7
வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்கு மூலதனம் மீதான வருவாய்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

(ரூ.9.0 பில்லியன்) கடன் இழப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் (ரூ.27.8 பில்லியன்) காரணங்களாக அமைந்தன. எனினும், 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் வட்டியல்லா வருமானத்தில் அதிகரிப்பும் (ரூ.7.0 பில்லியன்) வட்டியல்லாச் செலவுகளில் வீழ்ச்சியும் (ரூ.6.1 பில்லியன்) காணப்பட்டமையின் விளைவாக இவை இலாபத்திற்கு நேர்க்கணியமாகப் பங்களித்தன. முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வரிக்கு முன்னரான இலாபம் குறைவாகக் காணப்பட்டதெனினும் குறித்த காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.74.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.81.6 பில்லியனுக்கு ரூ.6.9 பில்லியனால் அதிகரித்தமைக்கு வரிக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களே காரணமாகும்.

- **வரிக்கு முன்னரான இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி இலாபத்தன்மை விகிதங்களில் பிரதிபலித்தன.** வரிக்கு முன்னரான சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் என்பன 2019 ஓகத்தின் முறையே 1.5 சதவீதத்திலிருந்தும் 10.8 சதவீதத்திலிருந்தும் 2020 ஓகத்தில் முறையே 1.3 சதவீதத்திற்கும் 10.6 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. மேலும், இக்காலப்பகுதியில் தேறிய வட்டி இலாபம் 3.6 சதவீதத்திலிருந்து 3.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிற்பாட்டுச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு 2020 ஓகத்தில் வினைத்திறன் விகிதத்தினை 2019 ஓகத்தின் 51.6 சதவீதத்திலிருந்து 53.8 சதவீதத்திற்கு அதிகரிக்க வழிவகுத்தது.

வரைபடம் 8.8
வங்கித்தொழில் துறையின் மூலதன போதுமாந்தன்மை




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

- **பாதகமான அதிர்ச்சிகளை உள்வாங்கிக் கொள்ளும் பொருட்டு 2020இன் முதலரைப்பகுதியில் வங்கித்தொழில் துறை போதுமான மூலதனத்தினைப் பேணியது.** 2020 யூன் இறுதியில் வங்கித்தொழில் துறை 13.1 சதவீதம் கொண்ட பொதுவான பங்குரிமை மூலதன விகிதத்துடனும் 16.4 சதவீதம் கொண்ட மொத்த மூலதன விகிதத்துடனும் தொழிற்பட்டதுடன் இது பாசல் III தேவைப்பாடுகளுக்கு மிக மேலாகக் காணப்பட்டது. எனினும், நடுத்தர காலப்பகுதியில் வியாபார வளர்ச்சிக்கான அதிகரிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கேற்ற

அட்டவணை 8.1
வங்கித்தொழில் துறை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2018 ஓகத் முடிவில் | 2019 ஓகத் முடிவில் | 2019 திசெ முடிவில் | 2020 ஓகத் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2019 ஓகத் | 2020 ஓகத்(அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 11,040 | 12,072 | 12,523 | 13,834 | 9.3 | 14.6 |
| கடன்களும் முற்பணங்களும் (ரூ.பில்லியன்) | 7,104 | 7,796 | 8,122 | 8,848 | 9.7 | 13.5 |
| முதலீடுகள் (ரூ.பில்லியன்) | 2,608 | 2,952 | 3,027 | 3,625 | 13.2 | 22.8 |
| வைப்புக்கள் (ரூ.பில்லியன்) | 8,089 | 8,836 | 9,162 | 10,344 | 9.2 | 17.1 |
| கடன்பெறுகைகள் (ரூ.பில்லியன்) | 1,548 | 1,621 | 1,679 | 1,737 | 4.7 | 7.1 |
| மூலதன நிதிகள் (ரூ.பில்லியன்) | 959 | 1,096 | 1,130 | 1,206 | 14.3 | 10.0 |
| அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%)(ஆ) | 12.8 | 13.5 | 13.0 | 13.1 | | |
| மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%)(ஆ) | 16.0 | 16.7 | 16.5 | 16.4 | | |
| திரண்ட செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 3.6 | 4.9 | 4.7 | 5.4 | | |
| தேறிய செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 1.7 | 2.6 | 2.3 | 2.6 | | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்) (%) | 1.9 | 1.5 | 1.4 | 1.3 | | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பின்) (%) | 14.6 | 10.8 | 10.3 | 10.6 | | |
| நியதித் திரவச்சொத்துக்களின் விகிதம் (உள்நாட்டு வங்கிப் பிரிவு) (%) | 30.0 | 31.2 | 31.0 | 38.5 | | |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் (%) | 27.4 | 29.3 | 28.9 | 34.5 | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) யூன் முடிவில் உள்ளவாறு

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

8

விதத்தில் நிதிகளைத் திரட்டிக் கொள்வதில் வங்கிகள் சவால்களை எதிர்நோக்கியுள்ளன. வங்கித்தொழில் துறையின் முடுக்கி விகிதம் (அதாவது மொத்த ஐந்தொகை மற்றும் ஐந்தொகைக்குப் புறம்பான வெளிப்படுத்துகையின் மீதான மூலதனத்தின் விகிதம்) 2020 யூன் இறுதியில் 6.6 சதவீதமாகக் காணப்பட்டது.


- **2020இன் முதலரைப்பகுதியில் வங்கிக் கிளை விரிவாக்கம் மேலும் விரிவடைந்து நாட்டின் நிதியியல் வசதிக்குட்படுத்துவதற்கு வசதியளித்தது.** இதற்கமைய, 2020இன் முதலரைப்பகுதியில் 150 தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் நிறுவப்பட்டதுடன் 9 கிளைகள் திறக்கப்பட்ட வேளையில் 7 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் 1 கிளையும் மூடப்பட்டன. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து நிலவிய சூழ்நிலைகளால் 2020இன் முதலரையாண்டுக் காலப்பகுதியில் எண்ணியல் வங்கித்தொழில் தீர்வுகள் மற்றும் நடமாடும் தீர்ப்பனவு முறைமைகளுக்கு கேள்வியால் உந்தப்பட்ட விரிவாக்கம் காணப்பட்டது.

## உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை

- **எதிர்க்கணியமான கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியடைந்து செல்லுகின்ற இலாபத்தன்மை மற்றும் செயற்படாக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் செயலாற்றம் பலயீனமடைந்திருந்தது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட வாகன இறக்குமதி மற்றும் குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாக வருமான மட்டம் குறைவடைந்தமை மற்றும் படுகடன் மீள்செலுத்தும் இயலுமை குறைவடைந்தமை என்பன துறையின் மந்தமடைந்தலுக்குப் பங்களித்தன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் சில ஒழுங்குமுறைப்படுத்தல் கரிசனைகளுக்கு[1] உரியனவாகக் காணப்பட்டதுடன் அவை முறையே மொத்தத் தேறிய சொத்துக்கள் மற்றும் மொத்த வைப்புக்கள் மொத்தச் சந்தை பங்குகளின் நியதிகளில் 11.1 சதவீதத்தையும் 16.0 சதவீதத்தையும் பிரசன்னப்படுத்தின. பலயீனமான நிதியியல் நிலைமைகளைக் கொண்டிருக்கும் கம்பனிகளை மீளெழுச்சிப்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் அத்தகைய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முக்கிய முன்மதியுடைய குறிகாட்டிகளைக் கண்காணித்து வருகிறது. இதன்படி, வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கும் நிதியியல் துறையின் நீண்ட கால உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்குமாக பலயீனமடைந்த நிதியியல் கம்பனிகளின் நிதியியல் வியாபாரத் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளித்து வசதியளிக்கும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல் வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குகின்ற விதத்தில் பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2020 ஓகத்து இறுதியிலுள்ளவாறு 41 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் (வியாபாரத் தொழிற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள 2 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உட்பட) 3 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் நிதியியல் முறைமையின் சொத்துக்களில் 7.6 சதவீதத்தினை பிரசன்னப்படுத்துகின்றன. யூன் 2020 இறுதியில், உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாயந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் 1,426 கிளை வலையமைப்புக்களுடன் காணப்பட்டது. ரூ.25 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்துத் தளத்தினைக் கொண்டிருக்கும் முதல் 14 கம்பனிகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த

வரைபடம் 8.9

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனித்துறையின் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

---

1 ஆகக்குறைந்த மையமூலதனம் மற்றும் ஆகக் குறைந்த மூலதன போதுமாந்தன்மை விகிதங்கள் தொடர்பான ஆகக் குறைந்த முன்னெச்சரிக்கை தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாத உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்.

அட்டவணை 8.2

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2018 ஓகத் முடிவில | 2019 ஓகத் முடிவில்(அ) | 2019 திசெ முடிவில்(ஆ) | 2020 ஓகத் முடிவில்(ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2019 ஓகத்(அ) | 2020 ஓகத்(ஆ) |
| மொத்தச் சொத்துக்கள் - திரண்ட (ரூ.பில்லியன்) | 1,469.6 | 1,531.2 | 1,528.3 | 1,502.6 | 4.2 | -1.9 |
| மொத்தச் சொத்துக்கள் - தேறிய (ரூ.பில்லியன்) | 1,406.4 | 1,442.4 | 1,432.7 | 1,388.7 | 2.6 | -3.7 |
| கடன்களும் முற்பணங்களும் - திரண்ட (ரூ.பில்லியன்) | 1,184.6 | 1,200.3 | 1,194.7 | 1,186.2 | 1.3 | -1.2 |
| கடன்களும் முற்பணங்களும் - தேறிய (ரூ.பில்லியன்) | 1,125.1 | 1,115.2 | 1,102.7 | 1,075.4 | -0.9 | -3.6 |
| வைப்புக்கள் (ரூ.பில்லியன்) | 718.0 | 764.6 | 756.7 | 734.0 | 6.5 | -4.0 |
| கடன்பெறுகைகள் (ரூ.பில்லியன்) | 440.7 | 406.9 | 405.6 | 355.9 | -7.7 | -12.5 |
| மூலதன நிதிகள் (ரூ.பில்லியன்) | 184.1 | 204.8 | 203.5 | 239.0 | 11.2 | 16.7 |
| அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 9.8 | 11.2 | 11.1 | 13.4 | | |
| மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 11.1 | 12.5 | 12.5 | 14.6 | | |
| திரண்ட செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 6.9 | 9.6 | 10.6 | 13.1 | | |
| தேறிய செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 2.2 | 3.1 | 3.4 | 4.3 | | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்) (%) ஆண்டுக்கு | 2.8 | 1.6 | 1.8 | 0.4 | | |
| பங்கு மூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பின்) (%) ஆண்டுக்கு | 12.9 | 4.3 | 5.6 | - 2.5 | | |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் (%) | 7.5 | 8.3 | 8.6 | 8.3 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் 80.1 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்துகின்றன.

- **2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் இத்துறையானது எதிர்க்கணியமான சொத்து வளர்ச்சியொன்றைக் காட்டியது.** 2020 ஓகத்து இறுதியில் துறையின் தேறிய சொத்துக்கள் 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 3.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்து (ரூ.44.0 பில்லியன்) ரூ.1,388.7 பில்லியனை அடைந்தது. சொத்துக்கள் தேய்வடைந்தமைக்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2020 ஓகத்து இறுதியில் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் 2.5 சதவீதத்தினால் (ரூ.27.3 பில்லியன்) குறைவடைந்தமைக்கு பொருளாதாரம் மெதுவடைந்தமையும் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் காரணங்களாகும்.

வரைபடம் 8.10

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனித்துறையின் செயற்படாக் கடன்கள்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் துறையினது சொத்தின் தரம் தேய்வடைந்தது.** செயற்படாக் கடன் விகிதம் முன்னைய காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட 9.6 சதவீதத்திலிருந்து 13.1 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் ஒதுக்கு காப்பு விகிதம் முன்னைய தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்து இறுதியில் 57.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

- **பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் துறையின் பொறுப்புக்கள் தேய்வடைந்தது.** 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் வைப்புத் தளம் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.0 சதவீதத்தினால் (ரூ.22.7 பில்லியன்) சுருக்கமடைந்தது. துறையின் கடன்பாடுகள் 12.2 சதவீதம் (ரூ.49.6 பில்லியன்) கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைக் காட்டியது.


- **உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் ஒட்டுமொத்த திரவத்தன்மை நிலைமை மிகையொன்றினைப் பதிவுசெய்தது.** 2020 ஓகத்து இறுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த ஒட்டுமொத்த நியதி திரவத்தன்மைச் சொத்துக்கள்

வரைபடம் 8.11
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனித்துறையின் மொத்த வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


வரைபடம் 8.13
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனித்துறையின் மூலதன நிலைமை




குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாடான ரூ.51.8 பில்லியனுக்கெதிராக ரூ.73.1 பில்லியன் கொண்ட மிகையினைக் காட்டின. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சாத்தியமான திரவத்தன்மைப் பற்றாக்குறை தொடர்பான எதிர்வு கூறல்களின் அடிப்படையில் ஒரு சில கம்பனிகள் இலங்கை மத்திய வங்கியின் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்திலிருந்து திரவத்தன்மை ஆதரவொன்றிற்கான கோரிக்கையை விடுத்திருக்கின்றன.

- **துறையின் மூலதன நிதியம் மேம்பட்டமைக்கு 2021 சனவரியில் ரூ.2 பில்லியனுக்கும் 2022 சனவரியில் ரூ.2.5 பில்லியனுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளின் அதிகரிப்பிற்கான ஆரம்பக் கோரிக்கைகளே காரணமாக அமைந்தன.** ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் இடர்பாட்டிலுள்ள நிதிக் கம்பனியொன்றின் உரிமம் இரத்துச் செய்யப்பட்டமை என்பனவற்றின் காரணமாக 2020 ஓகத்து இறுதியில் துறையின் மைய மூலதன மட்டம் ரூ.212.7 பில்லியனுக்கு அதிகரித்தது. துறையின் மைய மூலதன விகிதமும் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதமும் 2020 ஓகத்து இறுதியில் முறையே 13.4 சதவீதத்திற்கும் 14.6 சதவீதத்திற்கும் அதிகரித்தன. எனினும், குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத ஒரு சில உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் காணப்படுகின்றன.

வரைபடம் 8.12
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனித்துறையின் மொத்த திரவச் சொத்துக்கள் மற்றும் திரவத்தன்மை விகிதம்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் துறையின் இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்தது.** துறையின் தேறிய இலாபம் தேய்வடைந்ததுடன் இத்தொழில் துறையானது 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.3.0 பில்லியனை பதிவுசெய்தமைக்கு தேறிய வட்டி வருமானம் குறைவடைந்தமையும் உயர்ந்த நட்டக் கடன் ஏற்பாடுகளுமே முக்கிய காரணங்களாக அமைந்தன. 2020 ஓகத்து இறுதியில் வினைத்திறன் விகிதம் 93.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர்ந்த கடன் இழப்பு ஒதுக்கங்களே காரணமாக இருந்தது. 2020 ஓகத்து இறுதியில் வருடாந்த சொத்து மீதான வருவாயினாலும் பங்குரிமை மூலதன வருவாயினாலும் எடுத்துக்காட்டப்பட்டவாறு துறையின் இலாபத்தன்மை முறையே 0.4 சதவீதம் மற்றும் எதிர்க்கணிய 2.5 சதவீதமாகக் காணப்பட்டன.

வரைபடம் 8.14

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனித்துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## முதனிலை வணிகர் கம்பனிகள்

- **2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்களும் மொத்தச் சொத்துப்பட்டியலும் அதிகரித்தன.** 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் 17.1 சதவீதத்தினால் ரூ.90.8 பில்லியனுக்கும் முதனிலை வணிகர் கம்பனிகளினால் வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்களின் மொத்தச் சொத்துப்பட்டியல் ரூ.79.7 பில்லியனுக்கு 15.0 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இவ்வதிகரிப்பிற்கு முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழான கடன்பாடுகள் 2020 ஓகத்து இறுதியில் ரூ.69.1 பில்லியனுக்கு 14.6 சதவீதத்தினால் அதிகரித்தமையினை எடுத்துக்காட்டின.

- **2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனியின் இலாபத்தன்மை அதிகரித்தன.** 2020 ஓகத்துதில் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் ஆகிய நியதிகளில் அளவிடப்பட்ட முதனிலை வணிகர் கம்பனிகளின் இலாபத்தன்மை முறையே 4.6 சதவீதமாகவும் 14.6 சதவீதமாகவும் விளங்கின. பொதுவாக 2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள் 2019இன் இதே காலப்பகுதியின் தொடர்பான ரூ.3.7 பில்லியன் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூ.6.3 பில்லியன் கொண்ட இலாபத்தினைப் பதிவுசெய்தன. 2020 ஓகத்துடன் முடிவடைந்த 8 மாத காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள் மொத்த இலாபமாக (தேறல் செய்யப்பட்டவை மற்றும் தேறல் செய்யப்படாதவை) ரூ.6.1 பில்லியனைப் பதிவுசெய்தன. இது 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிட்டதொரு அதிகரிப்பாகும். விளைவு வளையியின் கீழ் நோக்கிய போக்கு முதனிலை வணிகர் கம்பனிகளின் இலாபத்தன்மையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்குக் காரணமாகியது.

அட்டவணை 8.3

முதனிலை வணிகர் கம்பனிகள் - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2018 ஓகத் முடிவில் | 2019 ஓகத் முடிவில் | 2019 திசெ முடிவில்(அ) | 2020 ஓகத் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2019 ஓகத் | 2020 ஓகத்(அ) |
| **மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்)** | 73.9 | 79.8 | 77.5 | 90.8 | 8.0 | 13.8 |
| மொத்தச் சொத்துப்பட்டியல் (ரூ.பில்லியன்) | 67.3 | 73.7 | 69.3 | 79.7 | 9.4 | 8.2 |
| மொத்த மூலதனம் (ரூ.பில்லியன்) | 11.9 | 14.4 | 15.2 | 18.0 | 20.6 | 24.8 |
| **வரிக்கு முன்னரான இலாபம் (ரூ.பில்லியன்)** | 1.3 | 3.7 | 4.8 | 6.3 | 180.2 | 69.6 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 22.3 | 23.0 | 27.6 | 26.9 | 0.7 | 3.9 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | 2.8 | 6.9 | 5.9 | 10.5 | 4.1 | 3.6 |
| **பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%)** | 13.9 | 33.1 | 27.3 | 41.9 | 19.2 | 8.8 |
| **முடிக்கித் தவணைகள்** | 5.1 | 4.4 | 4.0 | 3.8 | - 12.5 | - 13.2 |
| மொத்த வருமானத்திற்கான தொழிற்பாட்டுச் செலவுகள் (%) | 11.6 | 7.0 | 8.1 | 11.0 | - 4.6 | 4.0 |
| மொத்த வருமானத்திற்கான மொத்தச் செலவு (%) | 31.8 | 13.4 | 16.2 | 15.9 | - 18.3 | 2.4 |
| **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கால அளவு (ஆண்டுகள்)** | 2.5 | 2.5 | 3.0 | 2.6 | 2.7 | 0.9 |

(அ) தற்காலிகமானது

குறிப்பு: என்றஸ்ட் செக்குறிட்டிஸ் பிஎல்சி. மற்றும் பேர்பெட்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட்டின் நிதித் தரவுகள் நீங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **மூலதனம் ஆரோக்கியமான மட்டங்களில் பேணப்பட்டது.** 2020 ஒகத்து இறுதியில் அனைத்து முதனிலை வணிகர் கம்பனிகளும்[2] அவர்களது மைய மூலதனத்தினை குறைந்தபட்சத் தேவைப்பாடான ரூ.1.0 பில்லியனுக்கு மேலாகப் பேணின. முதனிலை வணிகர் கம்பனிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் 10 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்திற்கு மேலாகக் காணப்பட்டதுடன் இவ்விகிதம் 2020 ஒகத்து இறுதியில் 2019 ஒகத்து இறுதியில் காணப்பட்ட 23.0 சதவீதத்திலிருந்து 26.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

- **முதனிலை வணிகர் கம்பனிகளினது இடர்நேர்வுத் தோற்றப்பாடு மேம்பட்டது.** மொத்தச் சொத்துப்பட்டியலுக்கான வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் விகிதம், 2019 ஒகத்து இறுதியின் 83.3 சதவீதத்திலிருந்து 2020 ஒகத்து இறுதியில் 83.6 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தமையின் காரணமாக, சந்தை இடர்நேர்வுகளுக்கான இத்தொழில் துறையின் வெளிப்படுத்துகை குறித்த காலப்பகுதியில் உறுதியானதாகக் காணப்பட்டது. முதனிலை வணிகர் கம்பனிகள் இடர்நேர்வற்ற அரச பிணைய உடைமைகளைப் பெரும் விகிதத்தில் கொண்டிருந்தமையினையும் எதிர்பாராத திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கான நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பிணையுறுதிகளாக அத்தகைய அரச பிணையங்களைப் பயன்படுத்தக் கூடியதாக இருந்தமையும் கருத்தில் கொள்கையில் முதனிலை வணிகர் கம்பனிகளின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாடு குறைவாகக் காணப்பட்டது. மேலும், பெரும்பாலான முதனிலை வணிகர் கம்பனிகள் தேவையானவிடத்து திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கு எதிர்பாராத துணைநில் நிதியிடல் ஒழுங்குகளைக் கொண்டிருக்கின்றன.

2 பேப்பர்சுவல் ரெசரீஸ் மற்றும் என்டர்ஸ்ட் செக்குரிட்டீஸ் பிஎல்சி ஆகியன நீங்கலாக.

### காப்புறுதித் துறை

- **பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் காப்புறுதித் துறையின் ஒட்டுமொத்தச் செயலாற்றம் மந்தமானதொரு நிலையில் காணப்பட்டது.** 2020 யூன் இறுதியில் காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள் 13.0 சதவீதத்தினால் அதிகரித்தன. இது கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட 14.9 சதவீதம் கொண்ட சொத்துக்களின் அதிகரிப்பிலிருந்து சிறிதளவிற்கு குறைவடைந்தது. மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் வளர்ச்சி 2020 யூன் இறுதியில் 2.8

அட்டவணை 8.4
காப்புறுதி - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2018 யூன் முடிவில் | 2019 யூன் முடிவில் | 2019 திசெ முடிவில் | 2020 யூன் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2019 யூன் | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2020 யூன்(அ) |
|---|---|---|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | **581.8** | **668.3** | **691.4** | **755.2** | **14.9** | **13.0** |
| மொத்த வருமானம் (ரூ.பில்லியன்)(ஆ) | **108.1** | **123.8** | **251.8** | **120.8** | **14.5** | **- 2.3** |
| திரண்ட எழுதப்பட்ட தவணைக் கட்டன வருமானம் (ரூ.பில்லியன்)(ஆ) | 85.8 | 97.9 | 196.7 | 95.1 | 14.1 | - 2.8 |
| முதலீட்டு வருமானம் (ரூ.பில்லியன்)(ஆ) | 22.3 | 25.9 | 55.1 | 25.7 | 15.7 | - 0.5 |
| வரிக்கு முன்னரான இலாபம் (ரூ.பில்லியன்)(ஆ) | **21.7** | **13.7** | **27.7** | **18.2** | **- 36.8** | **32.7** |
| மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 310.3 | 293.0 | 298.0 | 308.0 | | |
| பொதுக் காப்புறுதி | 179.5 | 203.0 | 231.0 | 238.0 | | |
| பிடித்துவைத்தல் விகிதம் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 96.0 | 96.1 | 95.8 | 95.1 | | |
| பொதுக் காப்புறுதி | 76.1 | 78.5 | 83.0 | 75.9 | | |
| கோரல் விகிதம் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 44.2 | 42.0 | 45.6 | 40.6 | | |
| பொதுக் காப்புறுதி | 63.7 | 64.6 | 67.4 | 47.2 | | |
| இணைந்த தொழிற்பாட்டு விகிதம் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 98.0 | 92.9 | 96.0 | 88.2 | | |
| பொதுக் காப்புறுதி | 101.4 | 101.4 | 105.3 | 87.3 | | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 8.5 | 2.6 | 3.9 | 3.2 | | |
| பொதுக் காப்புறுதி | 5.1 | 5.8 | 6.1 | 7.7 | | |
| **பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) - பொதுக் காப்புறுதி** | **10.4** | **12.0** | **12.3** | **16.2** | | |
| **ஒப்புறுதி விகிதம் (%) - பொதுக் காப்புறுதி** | **18.0** | **17.9** | **14.7** | **33.3** | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்

*மூலங்கள்:* காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையம்
இலங்கை மத்திய வங்கி

சதவீதம் கொண்ட எதிர்க்கணியத்தில் காணப்பட்டதுடன் இது 2019 யூன் இறுதியில் அறிவிக்கப்பட்ட 14.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைவிட குறிப்பிடத்தக்கதொரு வீழச்சியாகும். 2020 யூன் இறுதியில் நீண்ட காலக் காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 3.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பொது காப்புறுதித் துறை 2020 யூன் இறுதியில் 7.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பொதுக்காப்புறுதித் துறையில் உபதுறைகளை கவனத்தில் கொள்ளும்போது சுகாதாரம் மற்றும் கடல் காப்புறுதி இரண்டும் 2020 யூன் இறுதியில் மொத்த பதியப்பட்ட கட்டுப்பணத்தில் தலா 10.6 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சி வீதத்தினை பதிவுசெய்தன. மேலும், பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் உந்து காப்புறுதி மற்றும் தீ காப்புறுதி என்பனவற்றின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் முறையே 3.8 சதவீதம் மற்றும் 1.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன.

- **பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் காப்புறுதித் துறையின் இலாபம் அதிகரித்திருக்கிறது.** 2020 யூன் இறுதியில் துறையின் மொத்த இலாபம் 32.7 சதவீதத்தினால் அதிகரித்தது. காப்புறுதித் துறையின் இலாபத்தில் 61.2 சதவீதத்திற்குப் பங்களிக்கும் நீண்டகால காப்புறுதித் துறையின் இலாபம் இக்காலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து 2020 யூன் இறுதியில் 20.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை அறிக்கையிட்டது. அதேவேளை பொதுக் காப்புறுதித் துறையின் இலாபம் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் கோரல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 116.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

- **இக்காலப்பகுதியில் பொதுக்காப்புறுதித் துறையினால் செய்யப்பட்ட கோரல்களின் அளவில் 28.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சி காணப்பட்டவிடத்து நீண்டகால காப்புறுதித் துறையினால் செய்யப்பட்ட கோரல்கள் 0.7 சதவீதத்தினால் சிறிதளவிற்கு வீழ்ச்சியடைந்தது.** 2020இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் அவதானிக்கப்பட்ட கோரல்களின் குறைப்பிற்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட முடக்கமே முக்கிய காரணமாகும். துறையின் முதலீட்டு வருமானம் 2020 யூன் இறுதியில் 0.5 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

## கூறு நம்பிக்கைத் துறை

- **கூறுநம்பிக்கைத் துறையின் செயலாற்றம் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ஒட்டுமொத்த முன்னேற்றமொன்றினை எடுத்துக்காட்டியது.** 2020 யூன் இறுதியில் கூறுநம்பிக்கை உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 2019 யூன் இறுதியின் 44,224 இலிருந்து 47,903 இற்கு அதிகரித்த போதும்கூட, கூறுநம்பிக்கைகளின் எண்ணிக்கை 2020 யூன் இறுதியில் 3 இனால் வீழ்ச்சியடைந்தன. கூறுநம்பிக்கைகளின் தேறிய சொத்துப்பெறுமதி 2019 யூனிலிருந்து 2020 யூனிற்கு ஏறத்தாழ 50.7 சதவீதத்தினால் அதிகரித்து 2020 யூன் இறுதியில் ரூ.113.4 பில்லியன் கொண்ட சொத்துப் பெறுமதியினை பதிவுசெய்தது. அரச பிணையங்களிலான முதலீடுகள் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் 115.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்ததுடன் பங்குரிமை மூலதனத்திலும் ஏனைய பிணையங்களிலுமான முதலீடுகள் முறையே 0.7 சதவீதத்தினாலும் 54.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

அட்டவணை 8.5

கூறு நம்பிக்கை துறை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2018 யூன் முடிவில் | 2019 யூன் முடிவில் | 2019 திசெ முடிவில் | 2020 யூன் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2019 யூன் | 2020 யூன்(அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 64.8 | 75.5 | 104.9 | 114.4 | 16.5 | 51.6 |
| தேறிய சொத்துப் பெறுமதி - (ரூ.பில்லியன்) | 64.6 | 75.2 | 104.8 | 113.4 | 16.4 | 50.7 |
| முதலீடுகள் (ரூ.பில்லியன்) | 64.8 | 75.3 | 104.8 | 114.4 | 16.3 | 51.9 |
| பங்குரிமை மூலதனம் | 11.1 | 8.0 | 9.8 | 8.1 | - 27.4 | 0.7 |
| அரச பிணையங்கள் | 5.3 | 4.0 | 4.0 | 8.6 | - 24.4 | 115.1 |
| ஏனையவை (உ.ம்: வர்த்தகப் பத்திரம், கடன்தொகுதிகள், நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் வங்கி வைப்புக்கள்) | 48.4 | 63.3 | 91.0 | 97.7 | 30.8 | 54.4 |
| தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக பங்குரிமை மூலதனத்தில் முதலீடுகள் | 17.2 | 10.7 | 9.4 | 7.2 | | |
| தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக அரச பிணையங்களில் முதலீடுகள் | 8.2 | 5.3 | 3.8 | 7.5 | | |
| தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக ஏனைய முதலீடுகள் | 74.9 | 84.1 | 86.9 | 86.1 | | |
| கூறு வைத்திருப்போரின் மொத்த எண்ணிக்கை | 41,200 | 44,224 | 46,481 | 47,903 | | |
| வழங்கலிலுள்ள கூறுகளின் எண்ணிக்கை (பில்லியன்) | 2.0 | 3.6 | 4.8 | 5.4 | | |
| நம்பிக்கை கூறுகளின் எண்ணிக்கை | 79 | 75 | 71 | 72 | | |

(அ) தற்காலிகமானது

*மூலங்கள்:* பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை நம்பிக்கை கூறுகளின் சங்கம்

### பங்குத்தரகர் கம்பனிகள் துறை

- **2020 யூன் இறுதியில் பங்குத்தரகர் கம்பனிகள் துறை அதன் மொத்த செயலாற்றுதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றினை எடுத்துக்காட்டியது.** பங்குத்தரகரின் வருமானம் 2020 யூன் இறுதியுடன் முடிவடைந்த காலப்பகுதியில் 84.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.443 மில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இதன்மூலம் இத்துறை இக்காலப்பகுதியில் ரூ.157.9 மில்லியன் கொண்ட இலாபத்தினை பதிவுசெய்து 2019இன் முதல் அரையாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 184.1 மில்லியன் கொண்ட இழப்பிலிருந்து மீட்சியடைந்தது. இத்துறையின் தேறிய மூலதனம் பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் 1.5 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தது.

### ஓய்வூகால நிதியங்கள்

- **ஊழியர் சேமலாப நிதியம் 2020 ஓகத்து இறுதியில் ரூ.2.7 றில்லியனுக்கு மேற்பட்ட சொத்துத் தளத்துடன் இலங்கையின் மிகப்பெரும் ஓய்வுகால நிதியமாக விளங்கியது.** 2019 திசெம்பர் இறுதியில் ஊ.சே. நிதியத்தின் உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 19.4 மில்லியனை அடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

- **2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் மொத்த உறுப்பினர் பங்களிப்பு ரூ.99.5 பில்லியனாக விளங்கி 4.9 சதவீதத்தினால் குறைவடைந்த வேளையில் மீளளிப்புக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.73.8 பில்லியனுக்கு 13.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** பங்களிப்புக்களிலும் மீளளிப்புக்களிலும் ஏற்பட்ட இக்குறிப்பிட்ட வீழ்ச்சிக்கு மந்தமடைந்த பொருளாதார நடவடிக்கைகளே காரணமாகும். இதன்படி, மீளாய்விற்குரிய காலப்பகுதியில் தேறிய பங்களிப்பு (பெறப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மீளளிப்புக்களிலிருந்து பெறப்பட்ட தேறிய பங்களிப்புக்கள்) ரூ.25.7 பில்லியனாகக் காணப்பட்டன.

- **2020 ஓகத்து 31 உடன் முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில் ஊ.சே. நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ.2,714 பில்லியனுக்கு 9.5 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து ஊ.சே. நிதியத்தின் மொத்த முதலீடு ரூ.2,712 பில்லியனுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்தது.** ஊ.சே. நிதியத்தின் முதலீடுகள் அரச பிணையங்களில் செய்யப்பட்ட 93.8 சதவீதத்தினையும் பங்குரிமை மூலதனத்தில் செய்யப்பட்ட 2.3 சதவீதத்தினையும் கம்பனிப் படுகடன், நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவில் செய்யப்பட்ட 1.5 சதவீதத்தினையும் மற்றும் நிலையான வைப்புக்களில் செய்யப்பட்ட 2.4 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது. 2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் மொத்த முதலீட்டு வருமானம் ரூ.172.6 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் இது 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 8.3 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும்.

- **2019இல் உறுப்பினர்களுக்கான வருவாய் வீதம் 2018இல் வழங்கப்பட்ட வீதமான 9.50 கொண்ட வட்டி வீதத்துடன் ஒப்பிடுகையில் 9.25 சதவீதமாகக் காணப்பட்டது.** 2019 உடன் ஒப்பிடும் போது 2020ஆம் ஆண்டிற்கு இதே வீதத்தினை அல்லது சிறிதளவு குறைவான வட்டி வீதத்தினை வழங்கக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறதுடன் 2020ஆம் ஆண்டுப்பகுதியில்

அட்டவணை 8.6

பங்குத் தரகு துறை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2018 யூன் முடிவில் | 2019 யூன் முடிவில் | 2019 திசெ முடிவில் | 2020 யூன் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2019 யூன் | 2020 யூன்(அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 10.5 | 7.5 | 9.7 | 13.5 | -27.9 | 78.4 |
| மொத்தப் பொறுப்புக்கள் (ரூ.பில்லியன்) | 5.0 | 2.5 | 4.5 | 8.4 | -49.5 | 232.7 |
| தேறிய மூலதனம் (ரூ.பில்லியன்) | 5.5 | 5.0 | 5.1 | 5.1 | -8.4 | 1.5 |
| வருவாய் (ரூ.பில்லியன்)(ஆ) | 384.6 | 239.6 | 574.0 | 443.0 | -37.7 | 84.9 |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் / (நட்டம்) (ரூ.மில்லியன்)(ஆ) | - 57.9 | - 184.1 | 88.0 | 157.9 | 218.2 | -185.8 |

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்

*மூலம்:* பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

அட்டவணை 8.7

ஊழியர் சேமலாப நிதியம் - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2019 யூன் முடிவில் | 2020 யூன் முடிவில் (அ) | மாற்றம் (%) ) |
|---|---|---|---|
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்லியன்) | 104.6 | 99.5 | - 4.9 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்லியன்) (ஆ) | 85.6 | 73.8 | - 13.8 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 2,477.9 | 2,714.4 | 9.5 |
| மொத்த முதலீடுகளின் சொத்துப்பட்டியல் (ரூ.பில்லியன்) | 2,471.9 | 2,711.9 | 9.7 |
| இதில், அரச பிணையங்கள் (%) | 94.7 | 93.8 | - 0.9 |
| திரண்ட வருவாய் (ரூ.பில்லியன்) (ஆ) | 159.4 | 172.6 | 8.3 |

(அ) தற்காலிகமானது

(ஆ) குறிப்பிட்ட ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.8

ஊழியர் நம்பிக்கை நிதியம் - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2019 யூன் முடிவில் | 2020 யூன் முடிவில் (அ) | மாற்றம் (%) ) |
|---|---|---|---|
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்லியன்) | 13.4 | 13.2 | - 1.5 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்லியன்) (ஆ) | 10.4 | 8.5 | - 18.3 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 327.7 | 362.7 | 10.7 |
| மொத்த முதலீடுகளின் சொத்துப்பட்டியல் (ரூ.பில்லியன்) | 308.3 | 342.2 | 11.0 |
| இதில், அரச பிணையங்கள் (%) | 77.8 | 81.8 | 5.1 |
| திரண்ட வருவாய் (ரூ.பில்லியன்) (ஆ) | 15.9 | 16.9 | 6.1 |

(அ) தற்காலிகமானது

(ஆ) காலப்பகுதியில்

மூலம்: ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை

சந்தை வட்டிவீதங்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பே இதற்கு முக்கிய காரணமாகும். நிதியத்தின் முதலீடுகளில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவை அரச பிணையங்களை உள்ளடக்கியிருப்பதனால், எதிர்காலச் சந்தை வட்டி வீதங்களில் ஏற்படுகின்ற வீழ்ச்சி நடுத்தர காலப்பகுதியில் முதலீடுகள் மீதான வருவாயின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை நிச்சயமாகக் கொண்டிருக்கும்.

- **2020 யூன் இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியம் சொத்துக்களின் நியதிகளில் விரிவடைந்ததுடன் பங்களிப்புக்களின் நியதிகளில் சிறிதளவு சுருக்கமடைந்தது.** ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2020 யூன் இறுதியில் 10.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.327.7 பில்லியனைப் பதிவுசெய்தது. பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் பங்களிப்புக்கள் 1.5 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்து ரூ.13.2 பில்லியனை அடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டு சொத்துப்பட்டியலைப் பொறுத்தவரையில் அரச பிணையங்கள் மீதான முதலீடு மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் 81.8 சதவீதம் கொண்ட உயர்ந்தளவு பங்களிப்பினைப் பதிவுசெய்தது. 2020 யூன் இறுதியில் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் நிலையான வைப்புக்களிலான முதலீடும் பங்குரிமை மூலதனத்தின் மீதான முதலீடும் முறையே 13.0 சதவீதத்திற்கும் 3.3 சதவீதத்திற்கும் வகைகூறின.

- **2020 யூன் இறுதியில் அரச சேவைகள் சேமலாப நிதியம் மொத்தச் சொத்துக்களின் நியதிகளிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை நியதிகளிலும் மேம்பட்ட அதே வேளையில் தேறிய பங்களிப்பினைப் பொறுத்தவரையில் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** 2020 யூன் இறுதியில் நிதியத்திற்கு பங்களிப்பினைச் செலுத்துகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2019 யூன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 230,414 உடன் ஒப்பிடுகையில் 233,534 இற்று அதிகரித்தது. நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2020 யூன் இறுதியில் 14.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.71.8 பில்லியனைப் பதிவுசெய்த வேளையில் நிதியத்தின் முதலீடுகள் 14.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.67.0 பில்லியனை பதிவுசெய்தன. அரச பிணையங்களிலான முதலீடுகள் மொத்த முதலீடுகளில் 27.7 சதவீதத்திற்கு வகைகூறின. 2020 யூன் இறுதியில் நிதியத்தின் தேறிய பங்களிப்பு 2019 யூன் இறுதியின் ரூ.240.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.155.5 மில்லியன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பங்களிப்பின் பெறுகைகளை பெறுவதில் காணப்பட்ட தாமதத்தின் முக்கிய விளைவாகும். உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாய் வீதம் இக்காலப்பகுதியில் 9.8 சதவீதமாகக் காணப்பட்டது.

## நிதியியல் சந்தைகளின் அபிவிருத்திகள்

### உள்நாட்டுப் பணச் சந்தை

- **2019 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து நிலவிய மிகையான திரவத்தன்மை நிலைமை 2020 இல் தொடர்ந்து காணப்படுகின்றமைக்கு, மத்திய வங்கியின் நாணயத் தொழிற்பாடுகளும் பரந்த வீச்சிலான ஏனைய காரணிகளுமே முக்கிய காரணங்களாகும்.** ஏனைய காரணிகளானது, நியதி ஒதுக்கு விகிதத்தில் செய்யப்பட்ட குறைப்பு, திறைசேரி உண்டியல்களின் முதலாந்தரக் கொள்வனவுகள், வெளிநாட்டுச்

செலாவணியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான நிகழ்வுகளைக் கவனத்தில் கொண்டு மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புக் கடன் திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. சந்தை மிகையான திரவத்தன்மையுடன் காணப்பட்டமையினால், தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காகக் காணப்படும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை துணைநில் வீத வீச்சின் நடுப்பகுதியில் பேணும் நோக்குடன் உள்நாட்டுச் சந்தையிலிருந்து மிகையான திரவ நிலைமையினை ஈர்த்துக் கொள்வதற்காக, 2020இன் முதற்காலாண்டுப்பகுதியில் மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டன. 2020இன் தொடக்கத்தில் சந்தைக் கடன் வழங்கல் வீதங்கள் தொடர்ச்சியாக குறைவடைவதற்கு ஆதரவளிப்பதற்காக, துணைநில் வீத வீச்சின் கீழ் மற்றும் மேல் எல்லையினை உருவாக்குகின்ற மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

- **மேலும், 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து சந்தைத் திரவத்தன்மையின் கிடைப்பனவில் நிச்சயமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் குறுங்கால வட்டி வீதங்களின் மீது ஏற்படக்கூடிய தேவையற்ற அழுத்தங்களைத் தடுப்பதற்காகவும் மத்திய வங்கியினால் பல நாணயத் தளர்த்தல் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதற்கமைய துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன் வழங்கல் வீதமும் 2020 மாச்சு 17ஆம் நாளிலிருந்து 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.25 சதவீதத்திற்கும் 7.25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்ட வேளையில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான ஏற்புடைத்தான துணைநில் வீச்சு 2020 மாச்சு 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 1.00 சதவீதத்தினால் 4.00 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதன் மூலம் ஏறத்தாழ ரூ.65.0 பில்லியன் பெறுமதி கொண்ட திரவத்தன்மை உள்நாட்டு பணச் சந்தைக்கு விடுவிக்கப்பட்டது. 2020 மாச்சு இறுதியிலிருந்து யூன் வரையிலான காலப்பகுதியில் சந்தை மிகையான மட்டத்தில் காணப்பட்டபோதும், மத்திய வங்கி பணச் சந்தை பங்கேற்பாளர்களிடையே காணப்பட்ட சீரற்ற திரவத்தன்மைப் பரம்பலைப் பரிசீலனையில் கொண்டும் சந்தையில் திரவத்தன்மையின் நிச்சயமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்குமாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தில் கீழ் நோக்கிய சீராக்கத்தினைத் தூண்டும் நோக்குடன் ஓரிரவு, மற்றும் குறுங்கால மற்றும் நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. மேலும் மத்திய வங்கி மூன்று மாதங்களைக் கொண்ட நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கான நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களினூடாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நீண்டகாலத் திரவத்தன்மை வசதிகளை வழங்கியது. அதேநேரம் திரவத்தன்மை ஆதரவு வசதியினூடாக தனியான முதனிலை வணிகர்களுக்கும் நீண்டகால திரவத்தன்மை உதவி 15 நாட்கள் வரையிலான நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு வழங்கப்பட்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்குகின்றதொரு வழிமுறையாக 2020 ஏப்பிறல் 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன் வழங்கல் வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.00 சதவீதத்திற்கும் 7.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

- **மேலும், திரவத்தன்மை முகாமைத்துவத்தில் கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையினை வழங்கும் நோக்குடன், மத்திய வங்கியுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியில் வைத்திருக்கவேண்டிய குறைந்தபட்ச நாளாந்த ஒதுக்குத் தேவைப்பாடுகள் 2020 ஏப்பிரல் 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் எந்தவொரு குறிப்பிட்ட நாளிலும் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்கில் 90 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.** நிதியியல் பதற்றநிலை எதிர்பார்க்கப்படுகின்ற காலப்பகுதியில் நிதியியல் நிறுவனங்களினால் பயன்படுத்தப்படக்கூடிய நிருவாக ரீதியாக தீர்மானிக்கப்படுகின்ற வீதமான வங்கி வீதம் 2020 ஏப்பிறல் 16 இலிருந்து 500 அடிப்படைப் புள்ளிகளினால் 15.00 சதவீதத்திலிருந்து 10.00 சதவீதத்திற்கு குறைக்கப்பட்ட அதே வேளையில் இது +300 அடிப்படைப்புள்ளி அளவுடன் துணைநில் கடன் வழங்கல் வசதியுடன் இசைந்துசெல்லும் விதத்தில் தன்னியக்கமாகவே அது சீராக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. வட்டி வீதங்களில் மேலும் கீழ் நோக்கிய போக்கினை தூண்டுவதற்கான தேவையினை பரிசீலனையில் கொண்டும் இதன் மூலமாக நிதியியல் முறைமையினால் பொருளாதாரத்தின் தேவையான


துறைகளுக்கு தீவிரமான கடன் வழங்கலை ஊக்குவிப்பதற்காகவும் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமும் 2020 மே 06ஆம் நாளன்று வியாபாரம் முடிவடைந்ததிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் மேலும் குறைக்கப்பட்டதுடன் இது 2020 யூலை 09ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் 100 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 4.50 சதவீதத்திற்கும் 5.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது.

- **மேலும், நியதி ஒதுக்கு விகிதம் 2020 யூன் 16ஆம் நாளன்று 200 அடிப்படைப் புள்ளிகளினால் 4.00 சதவீதத்திலிருந்து 2.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதால் உள்நாட்டுப் பணச்சந்தைக்கு இன்னுமொரு ரூ.115 பில்லியன் திரவத்தன்மை விடுவிக்கப்பட்டது.** அதேநேரம், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்கு விகிதத்தினைக் கணிப்பதற்கு பரிசீலனையில் கொள்ளப்படுகின்ற, நாணயத் தாள்களையும், குற்றிகளையும் உள்ளடக்கிய கையிலுள்ள பணத்தொகையும் 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. உள்நாட்டுப் பணச் சந்தையில் நிலவுகின்ற மிகையான திரவத்தன்மையுடன் 2020 யூன் 17ஆம் நாளிலிருந்து 2020 செத்தெம்பர் 24ஆம் நாள் வரையிலான காலப்பகுதியில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான ஏலங்கள் நடத்தப்படவில்லை. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மிகையான திரவத்தன்மையினை தொடர்ச்சியாக மத்திய வங்கியில் வைப்புச் செய்தமையின் காரணமாக, மத்திய வங்கி உள்நாட்டுப் பணச்சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினை துணைநில் வைப்பு வசதியினூடாக ஓரிரவு அடிப்படையில் ஈர்த்துக்கொண்டது. எனினும், உள்நாட்டு பணச்சந்தையில் காணப்பட்ட கணிசமான மிகையான திரவத்தன்மைக்கிடையிலும், வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவுகளின் காரணமாக திரவத்தன்மையில் குறைப்பு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பினைப் பரிசீலனையில் கொண்டும் இதன் காரணமாக போதுமான திரவத்தன்மைக் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் தேவையினை அங்கீகரிக்கின்ற விதத்திலும் 2020 செத்தெம்பர் 25ஆம் நாளிலிருந்து திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் ஏலங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கமைய, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக நீண்டகால மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களும் அதேபோன்று தனியான முதனிலை வணிகர்களுக்காக நீண்டகால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்களும் தேவையின் அடிப்படையில் நடத்தப்பட்டன.

- **மத்திய வங்கியின் நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகளைத் தொடர்ந்து, 2020 மே வரை கொள்கை வீத வீச்சின் நடுப்பகுதியில் தொடர்ந்து காணப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது துணைநில் வீத வீச்சின் கீழ் எல்லையினை நோக்கிப் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது.** மத்திய வங்கி 2020இன் முதலரைப்பகுதியின் பெரும்பாலான காலத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினை ஏறத்தாழ வட்டி வீத வீச்சின் நடுவீதத்தில் பேணக்கூடியதாக இருந்தது. 2020 சனவரியிலிருந்து ஏப்பிறல் வரையிலான காலப்பகுதியில் துணைநில் வீச்சின் மொத்தமாக ஏற்பட்ட 100 அடிப்படைப் புள்ளிகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமும் இதே அளவினால் சீராக்கப்பட்ட நிலையானது கொள்கை வீத சீராக்கங்களின் முழுப்பயனும் நிறைவடைந்தமையினை எடுத்துக்காட்டியது. மத்திய வங்கியின் தொடர்ச்சியான தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கைக்கு மத்தியிலும் உயர்ந்த திரவத்தன்மை மிகை காணப்பட்டமையின் காரணமாக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புச் சந்தை வீதம், துணைநில் வசதி வீதத்தின் கீழ்மட்ட வீதத்தினை நோக்கி நகர்வதற்கு அனுமதிக்கப்பட்டது. இது பொருளாதார நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும்

வரைபடம் 8.15

துணைநில் வீத வீச்சு, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப்பண வீதம் மற்றும் சந்தைத் திரவத்தன்மை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

முயற்சியொன்றாக சந்தைக் கடன் வழங்கல் வீதங்களை கீழ் நோக்கி குறைப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. 2020 செத்தெம்பர் இறுதியில், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புச் சந்தை வீதம் 4.53 சதவீதமாகக் காணப்பட்டது. மீள்கொள்வனவுச் சந்தையில் ஒருசில முதனிலை வணிகர்களின் உயர் வட்டி வீதங்களிலாலான கடன்பாடுகளின் முக்கிய காரணமாக 2020 செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் தொடக்க மாதங்களில் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் சராசரி அதிகரிப்பினை எடுத்துக்காட்டியதெனினும் அது சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புக்கடன் வீதத்திற்கு பெருமளவு அணித்தாகவே காணப்பட்டது. 2020 செத்தெம்பர் இறுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் 4.58 சதவீதமாகக் காணப்பட்டது.

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில், மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், தாழ்ந்த வட்டி வீதச் சூழலொன்றினைத் தூண்டும் விதத்தில் போதுமான திரவத்தன்மையின் கிடைப்பனவினையும் அதேவேளையில் நிதியியல் முறைமையின் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில், விசேட திரவத்தன்மை தேவைப்பாடுகளை கொண்டிருந்த துறைகளுக்கு கொடுகடன்களை வழங்கும்பொருட்டு, மத்திய வங்கி நாணயவிதிச் சட்டத்தின் 83(1) பிரிவின்படி, புதிய கொடுகடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. இதற்கமைய, அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஒப்பந்தக்காரர் மற்றும் வழங்குநர்களுக்கு சேரவேண்டிய வெளிநின்ற உண்டியல்களின் கொடுப்பனவின் ஏற்பாவணக் கடிதத்தின் மூலம் பிணையிடப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தான வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு, 4.00 சதவீதத்தினை விஞ்சாததொரு வட்டி வீதத்தில், அரசாங்க ஒப்பந்தகாரர்களுக்கும் வழங்குநர்களுக்கும் கடன் வழங்கும் நோக்கத்திற்காக 180 நாள் வரையிலான காலப்பகுதிக்கு ஆண்டொன்றிற்கு 1.0 சதவீதம் கொண்ட சலுகைவீதத்தில் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு கடன் வசதியொன்றினை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. 2020 ஒத்தோபர் 02 இல் உள்ளவாறு, இத்திட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ரூ. 4.57 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும், மத்திய வங்கி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் உள்நாட்டு வியாபாரங்களுக்கு 4.00 சதவீதத்தினை விஞ்சாததொரு வீதத்தில் கடன் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், பரந்த வீச்சிலான பிணையுறுதிகளின் உத்தரவாதத்திற்கெதிராக, 1.00 சதவீதம் கொண்ட சலுகை வீதத்தில் சௌபாக்யா கடன் திட்டம் கட்டம் II இன் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நிதியினை வழங்கியது. 2020 ஒத்தோபர் 02இல் உள்ளவாறு சௌபாக்யா கடன் திட்டம் கட்டம் II இன்கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ரூ.51.5 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.


### உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

- **2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2019 திசெம்பர் இறுதியின் ரூ.181.63 இலிருந்து 2020 செத்தெம்பரில் ரூ.185.52 இற்கு 2.10 சதவீதத்தினால் தேய்வடைந்தது.** 2020 பெப்புருவரி இறுதிவரைத் தொடர்ந்த தேர்தலுக்கு பின்னரான பொருளாதார உறுதிப்பாட்டினைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டு செலாவணி வீதம் தொடர்ந்திருக்கக்கூடிய தன்மையுடன் ஆரம்பித்து ஏறத்தாழ ரூ.181 மட்டத்தில் நகர்ந்தது. எனினும், எதிர்பார்க்கப்பட்ட உறுதிப்பாடு நீண்ட காலப்பகுதியில் உணரப்படாததுடன் மாச்சு நடுப்பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்ட செலாவணி வீதத்தின் மீதான குறிப்பிடத்தக்க அழுத்தம் செலாவணி வீதம் ஏப்பிறலில் ஏறத்தாழ ரூ.200 மட்டங்களினை அடைவதற்கு வழிவகுத்ததுடன் இதற்கு குறைந்த மட்டத்திலான ஏற்றுமதி பெறுகைகள், சுற்றுலாவுடன் தொடர்பான உட்பாய்ச்சல்கள் மற்றும் பணவனுப்பல்கள் அதேபோன்று கொவிட்-19 தொற்றின் உலகளாவிய நெருக்கடிகளைத் தொடர்ந்து அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் அதிகரித்த வெளிச்செல்கைகள் என்பன காரணங்களாக அமைந்தன. எனினும், இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது தற்காலிகக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் எடுக்கப்பட்ட கொள்கை பணிப்புரைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைக் குறைக்காமல் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை வழங்கும் நோக்குடன் சந்தைக்கு விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையுடன் சேர்ந்து மத்திய வங்கியினால் உடன் மற்றும் முன்னோக்கிய அடிப்படையிலான மிதமான வெளிநாட்டுச் செலாவணித்

தலையீடுகளினூடாக செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் குறைவடைவதற்கு ஆதரவளித்தன. இதற்கமைய, 2020இன் முதலரைப்பகுதியில் செலாவணி வீதத்தில் அவதானிக்கப்பட்ட தேய்வடையும் போக்கு 2020 செத்தெம்பர் இறுதியில் படிப்படியாக தளர்வடைந்தது. அதேவேளை, 2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது இந்திய ரூபா, ஸ்ரேலிங் பவுண் என்பனவற்றிற்கெதிராக சிறிதளவில் உயர்வடைந்த அதே வேளையில் அவுஸ்திரேலிய டொலர், யூரோ மற்றும் யப்பானிய யென்னுக்கெதிராக தேய்வடைந்தது.

- **2020 செத்தெம்பர் 30ஆம் நாள் முடிவடைந்த காலப்பகுதியில் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேறிய வாங்குநராகக் காணப்பட்டது.** குறிப்பாக, 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து மே வரையிலான காலப்பகுதியில் மிகையான தளம்பல்களைக் கொண்ட காலப்பகுதியில் மிதமான விற்பனைகள் காணப்பட்டமைக்கிடையில் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு ஏற்பட்ட உட்பாய்ச்சல் பெறுகைகள் மற்றும் இறுக்கமடைந்த இறக்குமதிக் கேள்வி என்பனவற்றுடன் 2020 மே இறுதியிலிருந்து நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை மத்திய வங்கி மீண்டும் ஆரம்பிக்கக்கூடியதாக இருந்தது. இதன்படி, செத்தெம்பர் இறுதி வரையிலான காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி ஐ.அ.டொலர் 629.0 மில்லியனை ஈர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் ஐ.அ.டொலர் 373.9 மில்லியனை நிரம்பல் செய்யக்கூடியதாகவும் இருந்தமையின் விளைவாக ஐ.அ.டொலர் 255.1 மில்லியன் கொண்ட தேறிய கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது.

வரைபடம் 8.16
ஐக்கிய அமெரிக்க டொலரொன்றிற்கான ரூபாயின் அசைவு



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **2020 செத்தெம்பர் 30இல் முடிவடைந்த காலப்பகுதியில் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வர்த்தகப்படுத்தலின் அளவு குறைவடைந்தது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வங்கிகளுக்கிடையிலான சந்தையின் வர்த்தகப்படுத்தல் அளவு 2020 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 14.85 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 13.97 பில்லியனுக்கு 6.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று, 2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நாளாந்த சராசரி அளவு 2019இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 82.98 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 79.37 மில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### அரச பிணையங்கள் சந்தை

- **2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் சந்தை முழுவதும் வரலாற்று ரீதியாக தாழ்ந்த விளைவு வீதங்கள் அவதானிக்கப்பட்டன.** முதலாந்தரச் சந்தையின் விளைவு வீதங்களின் கீழ் நோக்கிய சீராக்கங்களைத் தொடர்ந்து, 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதி முழுவதும் அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையியில் கீழ் நோக்கிய பெயர்வொன்று அவதானிக்கப்பட்டது. இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு, மத்திய வங்கி நிதி அமைச்சுடன் கலந்தாலோசித்துக் குறைந்த அடிப்படை அளவு வட்டி வீதங்களை வசதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கொள்கை பணிப்புரையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலவளங்களின் கிடைப்பனவு, தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் செய்யப்பட்ட உபாய வழங்கல் ஏற்பாடுகளின் விளைவாகும். இதற்கமைய, 2020 செத்தெம்பர் இறுதியில் 91 நாள், 182 நாள் மற்றும்


364 நாட்களுக்கான திறைசேரி உண்டியல்களில் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் 2019இன் இறுதியில் நிலவிய வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில் முறையே 301 அடிப்படைப் புள்ளியினாலும் 324 அடிப்படைப் புள்ளியினாலும் 351 அடிப்படைப் புள்ளியினாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, 2 இலிருந்து 8 ஆண்டுகள் வரையிலான முதிர்ச்சி வீச்சினைக் கொண்ட தீவிரமாக வர்த்தகப்படுத்தப்படும் முறிகளின் சந்தை விளைவு வீதங்கள் ஆய்விற்குரிய காலப்பகுதியில் 280 இலிருந்து 319 வரையிலான அடிப்படைப் புள்ளிகளின் வீச்சில் வீழ்ச்சியடைந்தன.

- **அரச பிணையங்களின் முதலாந்தர வழங்கல் செய்முறையின் காத்திரமானதும் வெளிப்படையானதுமான தன்மைகளை விட்டுக் கொடுக்காமல், பொதுத் திறைசேரியின் காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, கொவிட்-19 தொற்றுக் காலப்பகுதியிலிருந்து, அரச பிணையங்கள் சந்தையிலுள்ள அரச கொள்கைப் பணிப்புரைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பல ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன**. இதற்கமைய, சரியான தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கின்ற வேளையில் சந்தைப் பங்கேற்பாளர்களிடையே ஒரே சீரான தகவல்களை அதிகரிப்பதனை வசதிப்படுத்துவதற்காகவும் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி ஏலங்களில் முன்வைக்கப்படும் அனைத்து முதிர்ச்சிகளுக்குமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற உயர்ந்தபட்ச விளைவு வீதம் 2020 மே 12 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஏலத்திற்கு முன்னரான சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. மேலும், திறைசேரி முறிகளின் ஏலங்களுக்கான கால இடைவெளியினை, 2020 மேயிலிருந்து யூலை வரையிலான காலப்பகுதியில் பொதுத் திறைசேரியின் காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் மாதம் ஒரு ஏலம் என்ற நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையிலிருந்து விலகி மாதமொன்றிற்கு இரண்டு ஏலங்கள் என அதிகரிக்கப்பட்டது. அதேநேரம், ஏலக் கலண்டரை முன்கூட்டியே அறிவிப்பது நிதியிடல் அதிகாரமளிப்புக்களின் அடிப்படையில் கணக்குகளின் மீதான வாக்கினைக் கருத்திற் கொண்டு குறுகிய காலங்களில் பேணப்பட்டது.

- **2020 சனவரியலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் ரூ.141.6 பில்லியனுக்கு மேற்பட்ட கணிசமானதொரு நிதி சேமிப்பாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளிலிருந்து பெறப்பட்டன.** இதே காலப்பகுதியில் திறைசேரி

வரைபடம் 8.17

அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் வழங்கல் மூலம் மொத்தமாக ரூ.2,428.0 பில்லியன் திரட்டப்பட்டமையானது அரசாங்கம் 2019இல் இதே சாதனங்களின் நிதியிடல் செலவு நிறையேற்றப்பட்ட செலவுடன் ஒப்பிடுகையில் 2020இற்கானவை உட்பட அதன் வரவு செலத்திட்டத் தொழிற்பாடுகளில் கணிசமான சேமிப்புக்களை நிறைவு செய்வதற்கு அரசாங்கத்தினை இயலுமைப்படுத்தின.

### கம்பனிப் படுகடன் பிணையங்கள் சந்தை

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியிலும் 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் வர்த்தகப் பத்திரங்கள் சந்தை ஒப்பீட்டு ரீதியில் சுறுசுறுப்பாகக் காணப்பட்டன.** 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையிலான காலப்பகுதியில் வங்கிகளின் ஆதரவுடன் வழங்கப்பட்ட வர்த்தகப் பத்திரங்களின் பெறுமதி 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.3.3 பில்லியனாகக் காணப்பட்டது. 2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாதகாலப்பகுதியில் வர்த்தகப் பத்திரங்கள் மீதான வட்டி வீதங்கள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 13.50 சதவீதத்திற்கும் 16.25 சதவீதத்திற்குமிடையிலான வீச்சிலிருந்து 9.00 சதவீதத்திற்கும் 15.50 சதவீதத்திற்குமிடையிலான வீச்சிற்கு குறைவடைந்தது. மூன்று மாதங்கள் வரையிலான வீழ்ச்சிகளுடன்கூடிய வர்த்தகப் பத்திரங்கள் சந்தையில் 69.2 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் எஞ்சிய வர்த்தகப் பத்திரங்கள் ஆறு மாதகாலப்பகுதிக்கான முதிர்ச்சிக்காலத்துடன் வழங்கப்பட்டன. 2020 ஓகத்து இறுதியில் வர்த்தகப்

பத்திரங்களின் மொத்த வெளிநின்ற பெறுமதி 2019 ஓகத்தில் ரூ.2.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 2.1 பில்லியனாக விளங்கியது.


- **முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் கூட்டாண்மை முறிகள் சந்தையில் அவதானிக்கப்பட்ட நடவடிக்கைகள் குறைவாகக் காணப்பட்டன.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஏழு வாரகாலப்பகுதிக்கு தற்காலிகமாக மூடப்பட்டுமிருந்ததாலும் கூட்டாண்மை முறிகள் சந்தையின் செயலாற்றம் பாதிக்கப்பட்டது. 2019இன் தொடர்பான காலப்பகுதியில் ஒன்பது நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பதினேழு வகையிலான தொகுதிக் கடன்களுடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் ஆறு நிறுவனங்களினால் பன்னிரண்டு வேறுபட்ட வகையிலான தொகுதிக்கடன்கள் வழங்கப்பட்டன. 2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் பட்டியலிடப்பட்ட கூட்டாண்மை முறிகளின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 35.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.16.4 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவடைந்தது. இக்காலப்பகுதியில் வழங்கப்பட்ட பன்னிரண்டு தொகுதிக் கடன்களில் இரண்டு தொகுதிக் கடன்கள் மட்டுமே மிதக்கும் வட்டி வீதங்களுடன் வழங்கப்பட்டிருக்கின்ற அதேவேளையில் எஞ்சிய தொகுதிக் கடன்கள் நிலையான வட்டி வீதங்களில் வழங்கப்பட்டன. பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் தொகுதிக் கடன்களின் நிலையான வட்டி வீதங்கள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட 12.88 - 15.50 சதவீதம் கொண்ட வீச்சுடன் ஒப்பிடுகையில் 9.50 - 13.25 சதவீத வீச்சில் காணப்பட்டன.

## பங்குரிமைச் சந்தை

- **ஒட்டுமொத்தமாக, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2020 மே நடுப்பகுதியிலிருந்து பங்கு விலைகளின் நியதிகளில் மீட்சியொன்றிற்கான அறிகுறிகளைக் காட்டிய போதும் பல்வேறுபட்ட நிச்சயமற்ற பின்னணியொன்றில் இது 2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் மந்தமான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது.** குறைந்த வட்டிவீத அமைப்பொன்றின் காரணமாக உள்நாட்டு முதலீட்டாளர்கள் பங்குரிமைச் சந்தையை நோக்கிப் பெயர்ந்தமை, கொவிட்-19 இனைக் கையாள்வதில் நாட்டில் காணப்பட்ட மேம்பட்ட நிலைமைகள் மற்றும் புதிய அரசியல் உறுதிப்பாட்டின் காரணமாக ஏற்பட்ட நம்பிக்கை என்பனவற்றின் காரணமாக மோசமான செயலாற்றதிலிருந்து பங்குச் சந்தை மீட்சியடையத் தொடங்கியது. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தொடர்பான மோசமான செய்திகளின் காரணமாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை உயர்ந்த உணர்திறனை எடுத்துக்காட்டியது.

- **கொவிட்-19 தொற்றினால் உருவாக்கப்பட்ட சந்தை அழுத்தச் சூழ்நிலையொன்றில் இக்காலப்பகுதியில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண்களின் தளம்பல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.** மாச்சு 10 இலிருந்து மாச்சு 20 வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் கொவிட்-19 பரவத்தொடங்கியதுடன் சந்தை நாளொன்றுக்கு 30 நிமிடங்களுக்கு நிறுத்தப்பட்டு திறக்கப்பட்டமையின் காரணமாக ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் 5 சதவீதத்திற்கும் மேற்பட்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்காக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட பொருளாதார முடக்கத்தின் காரணமாக 2020 மாச்சு 20 இலிருந்து 2020 மே 11 வரை மூடப்பட்டிருந்தது. ஏழு வார காலமாக மூடப்பட்டமையின் பின் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மீளத் திறக்கப்பட்டமையினைத் தொடர்ந்து ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் 5 சதவீதத்திற்கு

வரைபடம் 8.18
பங்குச் சுட்டெண்களின் நகர்வுகள்





*மூலம்:* கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

மேல் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக மே 11 மற்றும் 12 இல் மீண்டும் நிறுத்தப்பட்டது. அதன்பின்னர் சந்தை மீட்சிக்கான சமிக்ஞைகளைக் காட்டியது. எனினும், நாட்டில் கொவிட்-19 உரிய கொத்தணிகள் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் உடனடியாகத் தோன்றிய சந்தைப் பதற்றங்களினைத் தொடர்ந்து யூலை 13 மற்றும் ஒத்தோபர் 05ஆம் நாட்களில் சந்தைச் சுட்டெண்கள் தளம்பலான தன்மையினைக் கொண்டிருந்தன.

- **ஒட்டுமொத்தமாக, 2020 செத்தெம்பர் இறுதியில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் என்பன 2019 இறுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 2.4 சதவீதத்தினாலும் 16.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.** 2020 செத்தெம்பர் இறுதியில் சந்தை மூலதனமயமாக்கல், 2019 இறுதியில் ரூ.2,851.3 பில்லியனிலிருந்து ரூ.2,595.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. சந்தை விலை வருவாய் விகிதம் 2019 இறுதியின் 10.8 மடங்கிலிருந்து 2020 செத்தெம்பர் இறுதியில் 10.1 மட்டங்கிற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் சராசரி நாளாந்த மொத்தப் புரள்வு முன்னைய ஆண்டின் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் காணப்பட்ட ரூ.661.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,481.6 பில்லியனுக்கு அதிகரித்தது. 2020 மே நடுப்பகுதியிலிருந்து ஏனைய குறிகாட்டிகள் முன்னேற்றத்தினைக் காட்டியபோதிலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்து முதலீட்டாளர்கள் அவர்களது முதலீடுகளை தொடர்ந்தும் வெளியே நகர்த்தினர். 2020 மே நடுப்பகுதியிலிருந்து ஏனைய குறிகாட்டிகள் முன்னேற்றத்தினைக் காட்டின. 2020இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் இரண்டாந்தரச் சந்தையில் ஒன்றுசேர்ந்த வெளிநாட்டு விற்பனைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2.6 பில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த வெளிநாட்டு விற்பனைகளுடன் ஒப்பிடுகையில் ரூ.39.9 பில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த வெளிநாட்டு விற்பனைகளைக் காட்டின. 2020 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாதகாலப்பகுதியில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் ஒரேயொரு ஆரம்பப் பங்கு வழங்கல் மட்டுமே காணப்பட்டது. இது ரூ.8.1 பில்லியன் கொண்ட தொகையைத் திரட்டியது.

வரைபடம் 8.19
கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு பங்குபற்றல்




*மூலம்:* கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

அட்டவணை 8.9
பங்குச் சந்தை - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2018 முடிவில் | 2019 செத். | 2019 முடிவில் | 2020 செத் |
|---|---|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (1985=100) | 6,052.4 | 5,738.2 | 6,129.2 | 5,984.8 |
| திகதி வரையிலான மாற்றம் (%) | - 5.0 | - 5.2 | 1.3 | - 2.4 |
| எஸ் அன்ட் பீ இலங்கை 20 சுட்டெண் (2004=1,000) | 3,135.2 | 2,759.2 | 2,937.0 | 2,463.3 |
| திகதி வரையிலான மாற்றம் (%) | - 14.6 | -12.0 | - 6.3 | - 16.1 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ. பில்லியன்) | 2,839.5 | 2,709.2 | 2,851.3 | 2,595.8 |
| மொ.உ.உ.யின் சதவீதமாக (%)(அ) | 19.7 | 18.7 | 19.0 | 17.3 |
| சந்தை விலை உழைப்பு விகிதம் | 9.7 | 10.2 | 10.8 | 10.1 |
| சராசரி நாளாந்தப் புரள்வு (ரூ. மில்லியன்) | 833.6 | 661.0 | 711.2 | 1,481.6 |
| தேறிய ஒன்றுசேர்ந்த வெளிநாட்டுக் கொள்வனவுகள் (ரூ. மில்) | - 23,247.5 | - 2,570.4 | - 11,735.3 | - 39,856.6 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 297 | 290 | 289 | 285 |
| ஆரம்பப் பங்கு வழங்கல் | 2 | 0 | 0 | 1 |
| ஆரம்பப் பங்கு வழங்கல்களின் மூலம் திரட்டப்பட்ட தொகை (ரூ.பில்லியன்) | 2.0 | 0 | 0 | 8.1 |

(அ) 2019இற்கான மொ.உ.உ. ஐ அடிப்படையாகக் கொண்டது (ரூ. 15,016 பில்லியன்)

*மூலம்:* கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

8

## நிதியியல் உட்கட்டமைப்பின் அபிவிருத்திகள்

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

- **தேசியக் கொடுப்பனவு உட்கட்டமைப்பு தனிப்பட்டவர்களினதும் நிறுவனங்களினதும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் தேவைகளுக்கு காத்திரமான முறையில் பணியாற்றுவதனூடாக நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் வசதியளித்து வருகிறது. நாட்டில் நிலவிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் சூழ்நிலையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையில் தடங்கலற்ற தொழிற்பாடு உறுதிப்படுத்தப்பட்டமையானது அவசரமான கொடுப்பனவுகளையும் ஏனைய கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொள்வதனையும் இயலுமைப்படுத்தியது.**

- **லங்காசெட்டில் முறைமையானது இரண்டு நெருங்கிய முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட முறைமைகளான அதேநேர மொத்தத் தீர்ப்பனவுகள் முறைமை மற்றும் லங்காசெகுயர் முறைமை என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை உயர் பெறுமதி வாய்ந்த நேர முக்கியத்துவம் வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கும் வங்கிகளுக்கிடையிலுமான கொடுக்கல்வாங்கல்களையும் தீர்ப்பனவு செய்கிறது.** உயர் பெறுமதி வாய்ந்த கொடுக்கல்வாங்கல்களுக்கு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை பயன்படுத்தப்படுவதனை ஊக்குவிக்கும் பொருட்டு 2020 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து இதற்கான கட்டணத்தை ரூ.1,000 இருந்து ரூ.400 இற்குக் குறைக்கப்பட்டது. மேலும், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினை வாடிக்கையாளர்கள் கூடுதலான நேரம் பயன்படுத்துவதனை அனுமதிக்கின்ற விதத்தில் வாடிக்கையாளர்களின் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்வதற்கான வெட்டுநேரம் பி.ப. 12.30 மணிவரை நீடிக்கப்பட்டது.

- **தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளின் தன்னியக்கக் கூற்றுப் பொறிக் கொடுக்கல்வாங்கல்கள் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடாக வழிப்படுத்தப்படுவதுடன் இவ்வட்டைகளின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு குறைக்கப்பட்ட கட்டண அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.** இதற்கமைய, பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடான கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம் தொடர்பில் 2020ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பொதுவான பணிப்புரையொன்று, தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தன்னியக்கக் கூற்றுப் பொறி கொடுக்கல்வாங்கல்களுக்காக விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கட்டணத்தினை உள்ளடக்கிய 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பொதுப் பணிப்புரைக்குப் பதிலாக விடுக்கப்பட்டது.

- **பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியைப் பயன்படுத்தி அநேக கொடுப்பனவுச் சாதனங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இது, கொடுக்கல்வாங்கல்களை வழிப்படுத்துவதற்கும் தீர்ப்பனவு செய்வதற்குமான தன்னியக்கக் கூற்றுப் பொறி, இணையத்தள வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில், கியோக்ஸ் மற்றும் கருமபீடக் கொடுக்கல்வாங்கல்கள் போன்ற பல்வேறு கொடுப்பனவு வழிமுறைகளினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுத் தீர்ப்பனவுகளுக்கு பொதுவான உட்கட்டமைப்பொன்றினை வழங்குகிறது.** ஜஸ்ட்பே குறைந்த பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான செல்லிடத் தொலைபேசி செயலியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுத் தீர்வாக விளங்கி ரூ.10,000 வரையிலான கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கிறது. 2020 ஏப்பிறலில் ஜஸ்ட்பே இன் கொடுக்கல்வாங்கலொன்றிற்கான உயர்ந்தபட்சப் பெறுமதி ரூ.25,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. மேலும், பல்வேறு அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் லங்காபே அதேநேரக் கொடுப்பனவுத் தளத்தில் இணைந்து கொள்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இது, அதேநேரக் கொடுப்பனவுகளுக்கு வசதியளித்ததுடன் 2020 செத்தெம்பர் இறுதியிலுள்ளவாறு மூன்று நிறுவனங்கள் அதாவது இலங்கைச் சுங்கம், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பனவற்றிற்கு லங்காபே அதேநேரக் கொடுப்பனவுத் தளமூடாக அதேநேரக் கொடுப்பனவு வசதிகள் வழங்கப்பட்டன.

- **“லங்காகியுஆர்" என வர்த்தக நாமமிடப்பட்ட தேசிய விரைவுப் பதிலிறுப்பு குறியீட்டு மாதிரி குறைந்த செலவிலான கொடுப்பனவுத் தீர்வுகளுக்கும் வேறுபட்ட கொடுப்பனவுப் பொறிமுறை மற்றும் சாதனங்களின் இடைத்தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்காக குறைந்த செலவிலான தேர்வொன்றினை வழங்குவதற்காகவும் வேறுபட்ட கொடுப்பனவுப் பொறிமுறைகள் மற்றும் சாதனங்களுக்கிடையிலான**

**இடைத்தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்குமாக வழங்கப்பட்டது.** மேலும், கியுஆர் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுத் தேர்வு வாடிக்கையாளர்களுக்கு வசதிகளையும் வழங்குகிறது. 2020 இல் மத்திய வங்கி லங்காகியுஆர் சான்றிதழ்படுத்தப்பட்ட நிறுவனங்களின் பங்களிப்புடன் அலுவலக ரீதியாக லங்காகிஞஆர் இனை ஆரம்பித்தது. வணிகர்களைச் சேர்ப்பதற்கும் வாடிக்கையாளர்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கும் மற்றும் கொடுப்பனவு முறையை உள்ளீர்ப்பதற்குமாக லங்காகியுஆர் தொடர்பாக நாடளாவிய ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- **பொதுமக்களினால் எண்ணியல் கொடுப்பனவுப் பொறிமுறை பயன்படுத்தப்படுவதன் பொருளாதார நன்மைகளைப் பரிசீலனையில் கொண்டு 2020ஆம் ஆண்டு எண்ணியல் கொடுப்பனவு ஆண்டாக குறித்துரைக்கப்பட்டது.** இதற்கமைய, நாளாந்தக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவு செய்வதற்கு எண்ணியல் கொடுப்பனவுப் பொறிமுறைகளைப் பயன்படுத்தும் விதத்தில் பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமாக 2020ஆம் ஆண்டு முழுவதிலும் பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 மாச்சில் மத்திய வங்கி "பணப் பரிமாற்றக் குறைப்பு" என்ற கோட்பாட்டுடன் எண்ணியல் பிரச்சாரமொன்றினை மேற்கொண்டது. மேலும், எண்ணியல் கொடுக்கல்வாங்கல் நிகழ்ச்சித்திட்ட ஆண்டின் கீழ் சுவரொட்டிகள், பதாதைகள் மற்றும் ஏனைய வாசிப்பிற்குரிய பொருட்கள் என்பன அனைத்துப் பங்குடமையாளர்களுக்கும் அவர்களது அலுவலர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் எண்ணியல் கொடுப்பனவுப் பொறிமுறைமையினைப் பயன்படுத்துவது தொடர்பில் அறிவூட்டுவதற்காக விநியோகிக்கப்பட்டன.

- **நிதியியல் சாதனங்களினதும் பணிகளினதும் வினைத்திறனையும் அதிகரித்த கிடைப்பனவினையும் ஊக்குவிக்கின்ற பின்டெக்கின் முன்முயற்சிகளை ஊக்குவித்து இயலுமைப்படுத்தும் குறிக்கோளுடன் 2020 பெப்புருவரியில் பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பு நிறுவப்பட்டது.** இதன்படி, பரிசோதனைக் கட்டமைப்பானது புத்தாக்கம் புனைவோர் தமது சாதனங்களையும் பணிகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை மீறாமல் பரிசோதித்துக் கொள்வதற்கான கட்டுப்பாடுமிக்க சூழ்நிலையொன்றினை வழங்குகிறது.

- **கொடுப்பனவு முறைமைகள் தொடர்பில் இத்தொழில்துறையின் ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுவாக விளங்கும் தேசிய கொடுப்பனவு ஆணைக்குழு 2020 - 2022 இற்கான அதன் வழிகாட்டலை இறுதிப்படுத்தியிருக்கிறது.** இவ்வழிகாட்டலானது வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு உட்கட்டமைப்பினை விரிவாக்குதல், இ-கொடுப்பனவுகளை ஊக்குவித்தல், நியமப்படுத்தல் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல், கொடுப்பனவு முறைமைகளுக்கான புத்தாக்கம், கொடுப்பனவு முறைமையின் பாதுகாப்பினைப் பலப்படுத்தல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு போன்ற துறைகளைப் பரந்தளவிற்கு உள்ளடக்கியிருந்தது. மேலும், தேசிய கொடுப்பனவு ஆணைக்குழு புதிய புத்தாக்கச் சாதனங்கள் மற்றும் எண்ணியல் கொடுப்பனவுத் தளம், சிறந்த வங்கித்தொழில் மற்றும் மெய்நிகர் வங்கித்தொழில் போன்றவற்றில் கவனம் செலுத்தும் விதத்தில் பின்டெக் இனை அபிவிருத்தி செய்வது தொடர்பில் குழுவொன்றினை நியமித்திருக்கிறது.

- **தொடரேட்டு தொழில்நுட்பவியலுக்கான தொழிற்பாட்டுக் குழு, நிதியியல் பணிகளின் பாதுகாப்பினையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு தொடரேட்டு தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதன் சாத்தியத்தினை ஆராய்ந்ததுடன் தொடரேட்டு தொழில்நுட்பவியலை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் தீர்வினைப் பகிர்ந்து கொள்வதற்கான ஆரம்ப வசதிப்படுத்தலுக்கும் விதந்துரைத்தது.** இதன்படி, பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் தீர்விற்காக பொதுப் தொடரேட்டு தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவது தொடர்பான இயலாற்றலை மதிப்பிடுவதற்காக கோட்பாட்டு நிரூபணத்தினை அபிவிருத்தி செய்வதற்கு முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்டெக் குழுவினால் பரிசீலனையில் கொள்ளப்பட்ட முன்மொழியப்பட்ட முன்னெடுப்புக்கள், எண்ணியல் கொடுக்கல்வாங்கல்களின் வினைத்திறனையும் பாதுகாப்பினையும் மேம்படுத்தும் பொருட்டும் அதன் மூலம் பௌதீக வடிவிலான பணப் பரிமாற்றத்தைக் குறைப்பதற்கும் பாரியளவு நிதியியல்

வசதிக்குட்படுத்தலை இயலுமைப்படுத்துவதற்குமாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது. மேலும், புதிய கொடுப்பனவுச் சாதனங்களையும் கோட்பாடுகளையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் நிதியியல் துறையினை அபிவிருத்தி செய்வதற்கும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்கும் வசதியளிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

### வெளிநாட்டுச் செலாவணியின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை

- **பல்வேறுபட்ட ஆர்வலர்களினதும் பிரச்சனைகள்/ கரிசனைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு மேலும் வசதிகளை வழங்கும் விதத்திலும் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும் மீளாய்வு செய்யப்பட்டதுடன் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் நிதி அமைச்சரினதும் அமைச்சரவையினதும் ஒப்புதலுக்காக அனுப்பி வைப்பட்டுள்ளன.** மேலும், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளில் காணப்படும் குறிப்பிட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதனையும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஒழுங்குமுறைப்படுத்தல் அம்சங்களை வலுப்படுத்துவதனையும் இலக்காகக் கொண்டு முன்மொழியப்பட்ட திருத்தங்களும் தேவையான நடவடிக்கைகளுக்காக நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினைத் தளர்த்துவதற்காகவும் வெளிநாட்டுச் ஒதுக்கு நிலைமையினை மேம்படுத்துவதற்காகவும் இவ்வாண்டுப்பகுதியில் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இதன்படி, முன்னர் அனுமதிக்கப்பட்ட பயணப்படியான ஐ.அ.டொலர் 10,000 இற்கெதிராக, எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயணத்தினை மேற்கொள்கின்ற இலங்கையில் வதியும் ஆட்களுக்கான பயணப்படியாக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 5,000 (அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயம்) வரையிலான வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அறிவுறுத்துகின்ற பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. மேலும், அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்கள் என அடையாளம் காணப்பட்ட சில பொருட்களின் இறக்குமதிக்கான, ஆவணங்களுக்கெதிரான கொடுப்பனவுகள் மற்றும் திறந்த கணக்கு கொடுப்பனவு நியதிகள் என்பனவற்றின் கீழ் வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பது உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் 2020 யூன் 20 வரை மூன்று மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுவோர் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் கவனத்திற் கொண்டு, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களை அறவிடுவதற்கு அவர்களுக்கு அறிவிக்கின்ற விதத்திலும் ஒன்றில் அவர்களின் தொழிலை இழந்த அல்லது அதே காரணத்திற்காக இலங்கைக்கு திரும்பிய வெளிநாட்டிலுள்ள இலங்கை ஊழியர்களுக்கும் அத்தகைய கடன்களை வெளிநாட்டு நாணயத்தில் அறவிடுவது இடர்ப்பாடாக இருக்கும் பொழுது இறுதி நடவடிக்கையொன்றாக அவசியமானவிடத்து அத்தகைய கடன்களை இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடனாக மாற்றிக் கொள்ளலாம் என்பதனை அறிவிக்கின்ற விதத்திலும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளையொன்றின் நியதிகளில் குறிப்பிட்ட விலக்கல்களுக்குட்பட்டு இலங்கையில் வதியும் ஆட்களினால் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடான வெளிநாட்டு முதலீடுகள், இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வைத்திருக்கப்படுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடான நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் மீதான பணவனுப்பல்கள் தவிர்ந்த வெளிமுகப் பணவனுப்பல்கள், புலம்பெயர் படிகளை ஏற்கனவே பெற்றுக்கொண்டவர்களினால் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாவை கணக்கினூடான புலம்பெயர் படிகளின் கீழ் செய்யப்படும் நிதிகளின் அனுப்பல் மற்றும் புலம்பெயர்வுப் படிகளை முதற்றடவையாக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 வரையில் கோருகின்ற புலம்பெயர்வோரின் தகைமையுடைய புலம்பெயர் படிகள் மீதான வரையறைகள் தொடர்பான குறிப்பிட்ட விலைக்கல்களை இடைநிறுத்தல் உட்பட மூன்று மாத காலப்பகுதிக்கு மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின்

வெளிமுக பணவனுப்பல்களின் மீது பல வழிமுறைகள் விதிக்கப்பட்டன.

- **இக்கட்டளை வலுவிழந்ததன் காரணமாக, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் புதிய கட்டளையொன்று விடுக்கப்பட்டதன் மூலம் மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது மேலும், ஆறு மாத காலப்பகுதிக்கு வழிமுறைகள் விதிக்கப்பட்டன.** இவ்வழிமுறைகள், குறிப்பிட்ட சில விதிவிலக்களுக்குட்பட்டு இலங்கையில் வதியும் ஆட்களினால் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக வெளிநாட்டு முதலீடுகளுக்காக வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட பொதுவான அனுமதியினை இடைநிறுத்தல், எந்தவொரு தொகை வரையிலுமான நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள் அல்லது இக்கட்டளை வலிதிலிருக்கும் காலப்பகுதியில் உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரையிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள் தவிர்ந்த இலங்கையில் வதியும் ஆட்களினால் வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடான ஏதேனும் வெளிமுகப் பணவனுப்பல்கள் மீதான இடைநிறுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. மேலும், மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளூடாக ஏற்கனவே புலம்பெயர் படிகளைக் கோரிய புலம்பெயர்ந்தோரினால் அல்லது முதல் தடவையாக புலம்பெயர் படிகளைக் கோருகின்றவர்களுக்காக புலம்பெயர்ந்தோர் படியாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் நிதி இக்கட்டளை வலிதிலுள்ள காலப்பகுதியில் முறையே ஐ.அ.டொலர் 20,000 இற்கும் ஐ.அ.டொலர் 30,000 இற்கும் மட்டுப்படுத்தப்பட்டது.

- **உள்முக பணவனுப்பல்களை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்ட இலங்கையர் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆளினால் 2020 ஒத்தோபர் 2 வரை புதிய உள்முக பணவனுப்பல்களுடன் "சிறப்பு வைப்புக் கணக்கு" என்ற பெயரில் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்று வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.** சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறந்து பேணுகின்றமை மற்றும் அதன் மீது அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான பிரமாணங்களைக் குறித்துரைக்கின்ற பணிப்புரைகள் அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு விடுக்கப்பட்டன. இப்பணிப்புரைகள், வங்கித்தொழில் வழிப்படுத்தல்களினூடாகப் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்களுக்குப் புறம்பாக, சிறப்பு வைப்புக் கணக்குகளுக்காக சட்ட ரீதியாக வெளிநாட்டு நாணயத் தாள்களை அதிகாரம்பெற்ற வணிகர்கள் கையேற்பதனை இயலுமைப்படுத்தின. வெளிநாட்டு நாணயங்களின் வடிவில் சிறப்பு வைப்புக் கணக்குகளுக்குக் கூடுதலான வைப்புக்களைக் கவரும் நோக்குடன் வெளிநாட்டு நாணயச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் புதிய கட்டளை விடுக்கப்பட்டதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அதே பிரிவின் கீழ் ஏற்கனவேயுள்ள கட்டளை இரத்துச் செய்யப்பட்டு இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளினால் வைத்திருக்கக்கூடிய அவரின் உடமையிலுள்ள வெளிநாட்டு நாணயத்தின் தொகை முன்னர் அனுமதிக்கப்பட்ட தொகையான ஐ.அ.டொலர் 10,000 இலிருந்து ஐ.அ.டொலர் 15,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.

- **நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்கு நிலைமைக்கான சாதகமான தாக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு, வழமையான கால வைப்புக்களுக்கு ஏற்புடைத்தான வட்டி வீதங்களுடன் முதிர்ச்சிக்கு அப்பாலும் சிறப்பு வைப்புக் கணக்குகளைப் புதுப்பிக்கவும் தொடரவும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியளிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன.** சிறப்பு வைப்புக் கணக்கின் உடமையாளர் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு, உள்முக முதலீட்டுக் கணக்கு என்பனவற்றைத் திறந்து, பேணி வருவதற்கு தகைமையுடையவராக இருக்குமிடத்து அத்தகைய கணக்குகளுக்கு சிறப்பு வைப்புக் கணக்குகளின் முதிர்ச்சியடைந்த பெறுகைகளை மாற்றல் செய்வதற்கு இவ்வொழுங்குவிதிகள் அனுமதிக்கின்றன.

### நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள்

- **நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் நிதியியல் வாடிக்கையாளர் கரிசனைகளுடன் தொடர்பான பிரச்சனைகள் கையாளப்படுவதனை ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்குடன் திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க**

8

**நாணயவிதிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிறுவப்பட்டது.** உத்தேசிக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்புடன் இணங்கிய நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புடைய திணைக்களத்தின் விதிமுறைக் குறிப்புக்கள் எதிர்காலத்தில் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படவுள்ளதான பலதரப்பட்ட நீண்ட மற்றும் குறுகிய காலக் கொள்கைகளை முன்னிலைப்படுத்தியுள்ளது. குறுங்காலத்தில் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் மத்திய வங்கிக்கு நெறிப்படுத்தப்படுகின்ற அனைத்து முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளைப் பெற்று அவற்றினைத் தீர்த்து வைக்கும் தனியொரு மையமாகப் பணியாற்றும். நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தின் அதிகார வரம்பின் கீழ்வரும் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், முதனிலை வணிகர்கள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியவை காணப்படுகின்றன. அதேவேளை, நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் சந்தை நிலைமைகளின் நியமங்களை மேற்பார்வை செய்தல், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தை அபிவிருத்திகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கொள்கைகளை வடிவமைத்தல், ஒழுங்கீனமான நடவடிக்கைகள் மற்றும் தவறான நடத்தைகள் தொடர்பில் முன்கூட்டியதும் எதிர் நடவடிக்கை சார்ந்ததுமான வழிமுறைகளை எடுக்கின்ற அதேவேளையில் நடுத்தர காலத்தில் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சனைகள் தொடர்பில் ஏற்படக்கூடிய பாதிக்கப்படும் தன்மைகளை அடையாளம் கண்டு கொள்வதிலும் முக்கிய கவனத்தினைச் செலுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான புதிய சட்டம் இயற்றப்படும் வரை ஏற்கனவேயுள்ள சட்டக் கட்டமைப்பின் கீழ் தற்காலிகமான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டு வருகிறது.

- **நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான முறைப்பாடுகளையும் மனக்குறைகளையும் விசாரணைகளையும் தொடர்ச்சியாகப் பெற்று வருகின்றது.** இத்திணைக்களம் 2020 ஓகத்து 10 அன்று ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2020 செத்தெம்பர் 30ஆம் திகதி வரை ஏறத்தாழ மொத்தமாக 10,000 இற்கு மேற்பட்ட அழைப்புக்கள், தொலைநகல்கள், மின்னஞ்சல்கள் மற்றும் கடிதங்களைப் பெற்றிருக்கிறது. நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் அதிநவீனத்துவமான மையமொன்றினை இலங்கை மத்திய வங்கியில் ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறது. இது, 2020 இறுதியளவில் தொழிற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- நீண்ட காலத்தில் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் இலங்கையில் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை முறைசார்ந்ததாக்குவதற்கும் உடைந்த போன நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் புதிய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு அதிகாரசபையொன்றாக மாற்றியமைக்கப்படுகின்ற விடத்து அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களும் இலங்கையிலுள்ள நிதியியல் முறைமைக்குள் உள்ளடக்கப்படும். புதிய அதிகாரசபை புதிய சட்டவாக்கத்தினூடாக உருவாக்கப்படும். இது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பிழையான நடத்தைகள் தொடர்பான நாணய ரீதியான தண்டங்களை விதிக்கின்றமை உட்பட மற்றைய விடயங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

### பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

- 2017 ஒத்தோபரில் நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழு, அதன் இணங்குவிப்பு ஆவணமான, அதாவது, சாம்பல்பட்டியலில் பணம் தூயதாக்குதலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் உபாய குறைபாடுடைய நியாயாதிக்கமொன்றாக இலங்கையினை அடையாளம் கண்டமையினைத்

8

தொடர்ந்து 2018 பெப்புருவரியில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையினை உயர் இடர்நேர்வினைக் கொண்ட மூன்றாந்தர நாடாகப் பட்டியலிட்டது. அவ்வாறு பட்டியலிடப்பட்டமையினைத் தொடர்ந்து அடையாளம் காணப்பட்ட உபாயக் குறைபாடுகளைக் காலக் கட்டமைப்புடன் கூடிய நடவடிக்கைத் திட்டம் மூலம் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டது. நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினால் பட்டியலிடப்பட்டதிலிருந்து நிதியியல் உளவறிதல் பிரிவு, மற்றைய ஆர்வலர்களுடன் இணைந்து, வழங்கப்பட்ட காலக் கட்டமைப்பொன்றிற்குள் நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு காத்திரமானதும் சாத்தியமானதுமான நடவடிக்கைகளைத் தொடராக மேற்கொண்டது. இதற்கிணங்க நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழு, பாரிசில் 2019 ஒத்தோபர் 13 - 18ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற அதன் மாநாட்டில் சாம்பல் பட்டியலிலிருந்து இலங்கையினை நீக்கியது. நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினால் சாம்பல் நிறப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டமையினைத் தொடர்ந்து ஐரோப்பிய ஆணைக்குழு, 2020 மே 7ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட அதன் அறிக்கையில் உயர் இடர்நேர்வினைக் கொண்ட பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் உபாயக் குறைபாடுகளைக் கொண்டுள்ள மூன்றாம் நாடுகளிலிருந்து இலங்கையினை நீக்கியது.

- பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக்களை வலுப்படுத்தும் பொருட்டு, நிதியியல் உளவறிதல் பிரிவு கணக்காளர்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்லது கம்பனி பணி வழங்குபவர்கள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் பங்குரகர்களுக்கான சூழலை அடிப்படையாகக் கொண்ட லங்காபின் இன் அறிக்கையிடல் என்பனவற்றை முக்கிய கவனத்தில் கொண்டு நிதியியல் உளவறிதல் பிரிவு 2020 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் பல்வேறு சுற்றறிக்கைகளையும் வழிகாட்டல்களையும் விடுத்தது. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுச் சூழலின் காரணமாக தோன்றக்கூடிய நிதியியல் முறைமை இடர்நேர்வு மற்றும் பாதிக்கப்படும் தன்மை என்பனவற்றை முக்கியமாக வலியுறுத்துகின்ற விதத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவு, நாட்டிலுள்ள அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கு, அவற்றின் கண்காணிப்பு மற்றும் நுணுக்கமாகக் கவனித்தல் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் தோன்றுகின்ற சாத்தியமான பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல்களிலிருந்து நிதியியல் முறைமையினைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றி ஆலோசனை வழங்கும் விதத்தில் சுற்றறிக்கைகளை விடுத்தது.

- **சட்டத்திற்கு மாறான போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான பணம் தூயதாக்கலை ஒழிக்கும் முயற்சியில் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்களை மேலும் வலுப்படுத்துவதற்காக, பணம் தூயதாக்கல் விசாரணைகள் தொடர்பில் விசாரணை அலுவலர்களிடையேயான விழிப்புணர்வினை அதிகரித்தல், விசாரணையாளர்கள் வழக்குத் தொடுநர்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிடையே தொடர்ச்சியாக இணைப்புக்களை ஏற்படுத்தல்,** நிதியியல் நிறுவனங்களுக்கு நிறுவன ரீதியான இணங்குவிப்புக்கள் மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்களின் முயற்சிக்கு ஆதரவளித்தலில் அவர்களது பொறுப்புக்கள் தொடர்பில் விளக்கமளித்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தொடர்ச்சியான பல வழிமுறைகளை நிதியியல் உளவறிதல் பிரிவு முன்னெடுத்து வருகின்றது.

### நிதியியல் துறையுடன் தொடர்பான சட்டச் சீர்திருத்தங்கள்

- **2020ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது பல்வேறு சட்ட சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன.** நாட்டின் வங்கிதொழில் முறைமையினை மேற்பார்வை செய்வதற்கான உறுதியான சட்ட அடித்தளத்தை உருவாக்கும் பொருட்டு நடைமுறையிலுள்ள 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிதொழில் சட்டத்தினை இரத்துச்செய்து, புதிய வங்கித்தொழில் சட்டமொன்றினை அறிமுகம் செய்வதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவசியமான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு

8

மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றுக்குத் தேவையான திருத்தங்களை வசதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் கலந்துரையாடல்களும் நடைபெற்று வருவதோடு பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றை நடைமுறைப்படுத்தும் நோக்கில் சட்டக் கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கான கலந்துரையாடல்களும் நடைபெற்று வருகின்றன.

### தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்

- **தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் மூன்று (3) உரிமம்பெற்ற இரத்துச்செய்யப்பட்ட/ இடைநீக்கம் செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் (த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, ஈரிஜ பினான்ஸ் லிமிடெட், மற்றும் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விசஸ்) வைப்பாளர்களுக்கு இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினூடாக இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஆரம்பித்திருக்கின்ற வேளையில் மற்றும் மூன்று உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்ட மூன்று (3) நிதிக் கம்பனிகளின் (சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, ஸ்ரான்டட் கிறெடிட் பினான்ஸ் லிமிடெட் மற்றும் ரிகேஎஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி) என்பனவற்றின வைப்பாளர்களுக்கு தொடர்ந்தும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொண்டு வருகிறது.** த பினான்ஸ் கம்பனி, ஈரிஜ பினான்ஸ் லிமிடெட், மற்றும் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விசஸ் என்பன தொடர்பில் இழப்பீட்டுக் கொடுப்பனவு நடைமுறைகளை விரைவுபடுத்தும் நோக்குடன் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் மிகச் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் முகவர் வங்கித்தொழில் கோட்பாடொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதன்படி, நாணயச் சபை, இம்மூன்று கம்பனிகளினதும் பாதிக்கப்பட்ட வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு முகவர் வங்கியாக மக்கள் வங்கியை நியமித்திருக்கிறது.

- **அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்களிலும் தடைசெய்யப்பட்ட திட்டங்களிலும் முதலீடுகளை மேற்கொள்வதன் பலாபலன்கள் தொடர்பில் மாணவர்கள் மற்றும் அரச அலுவலர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது.** தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள அலுவலர்கள் நிதியியல் ஏமாற்றுக்கள் மற்றும் மோசடிகள் தொடர்பில் சமூகத்தில் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றனர். அதேநேரம், பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் புலன்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்களிடமிருந்தும் வேறு பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் பெறப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் புதிய விசாரணைகளை திணைக்களம் ஆரம்பித்தது.

### அபிவிருத்தி நிதி மற்றும் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல்

- **மத்திய வங்கி அரசாங்கத்தின் சார்பில் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக பல மீள்நிதியிடல்கள், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களுக்கு மேலதிகமாக தொழிற்படு மூலதனக் கடன் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது.** தனிப்பட்டவர்கள் மற்றும் சுயதொழில் புரியும் மக்கள் உட்பட கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்தின் ஆலோசனையுடன் சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியை மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தியது. முதலாவது கட்டம் நாணயவிதிச் சட்டத்தின் 88ஆம் பிரிவின் நியதிகளில் மீள்நிதியிடல் வசதியை உள்ளடக்கியிருந்த வேளையில் இரண்டாவது கட்டம் நாணய விதிச் சட்டத்தின் 83ஆம் பிரிவின் நியதிகளில் நிதியிடல் வசதிகளை வழங்குவதற்காக நடைமுறைக்கிடப்பட்டது. மூன்றாவது கட்டம் நாணயவிதிச் சட்டத்தின் 108ஆம் பிரிவின் நியதிகளில் கொடுகடன் உத்தரவாதங்களையும் வட்டி உதவுதொகை வசதிகளையும் வழங்குவதற்காக நிறைவேற்றப்பட்டது. சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட தொழிற்படு மூலதனக்

கடன்களின் மொத்தப் பெறுமதி ரூ.175 பில்லியனாக விளங்கியதுடன் இது 2020 செத்தெம்பர் இறுதியில் 60,175 பயன்பெறுநர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த தொழிற்படு மூலதனத்தில் ஏறத்தாழ 50 சதவீதம் பணிகள் துறையிலுள்ள சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட வேளையில் ஏறத்தாழ 34 சதவீதமும் 16 சதவீதமும் முறையே கைத்தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

- **இதற்குப் புறம்பாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக மேலும் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** பெருந்தோட்ட அமைச்சினதும் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினதும் ஒத்துழைப்புடன் தேயிலைத் துறைக்கு தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தினை வழங்கும் பொருட்டு வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டமொன்று நடைமுறைக்கிடப்பட்டது. மேலும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் காரணமாக பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன்கள் நிதி அமைச்சின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டன. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீது விதிக்கப்பட்ட வருடாந்த வட்டி வீதங்கள் 7 சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட வேளையில் சௌபாக்கிய கடன் திட்டத்திற்கு பிரயோகிக்கத்தக்க வட்டி வீதம் 8 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. கூடுதலான மூலவளங்கள் சுயதொழில் வாய்ப்பு, ஊக்குவிப்பு கடன் திட்டங்களின் கீழான கடன் ஏற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட வேளையில் கடன்பாட்டளரொருவருக்கான உயர்ந்தபட்ச கடன் தொகையும் ரூ.500,000 இலிருந்து ரூ.1 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இவை தவிர சுவசக்தி கடன் திட்டத்தின் கீழ் புதிய தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச கடன் தொகையும் ரூ.250,000 இருந்து ரூ.450,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.

அட்டவணை 8.10

2020 செத்தெம்பர் இறுதியில் உள்ளவாறான மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சௌபாக்யா கொவிட் - 19 மறுமலர்ச்சி வசதிகளின் விபரங்கள்

| வசதி | அங்கீகரிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி ரூபா பில்லியன் (ரூ.மில்) |
|---|---|---|
| கட்டம் I (மறுநிதியளிப்பு) | 16,346 | 30.0 |
| கட்டம் II | 26,540 | 92.0 |
| கட்டம் III (கடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுத்தொகை) | 17,289 | 53.0 |
| **மொத்தம்** | 60,175 | 175.0 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **மேலும், மத்திய வங்கி, நிதியியல் வசதிக்குட்படுத்துவதனை ஊக்குவிப்பதற்காகவும் முறையியல் சார்ந்த நிதியியல் துறைக்குள் உட்படாதவர்களை இலக்காகக் கொண்டு நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கும் பல வழிமுறைகளை மேற்கொண்டது.**

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் வாய்ந்த தன்மையினைப் பேணுவதில் முக்கியமானவையாக விளங்கும் மூலதனம் மற்றும் திரவத்தன்மைத் தாங்கிருப்புக்களைப் பேணுவதன் அவசியத்தினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி, கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிப்பதற்காக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பரந்த வீச்சிலான அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானித்தது.** வங்கித்தொழில் துறை மீதான கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள்/ தனிப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான வழிமுறைகளினூடாக மேற்கொள்ளப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் பெறுபேறுகளை இனிமேல்தான் மதிப்பிடப்பட வேண்டியிருக்கும்.

- **அறிமுகப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளுடனும் பொருளாதாரத்திற்கான கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய அதிவிசேடத்துவமான கொள்கை வழிமுறைகளுடனும் இசைந்து செல்லும் விதத்தில் நடுத்தர காலத்தில் கொடுகடன் வளர்ச்சி படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** எனினும், தற்பொழுது தொழிற்பாட்டுச் சூழலில் காணப்படும் சவால்களின் காரணமாக வங்கித்தொழில்

துறையில் செயற்படாக் கடன்களில் படிப்படியான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டிருப்பதுடன் இக்கட்டத்தின் செயற்படாக் கடன்கள் மீதான கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நடுத்தர மற்றும் நீண்ட கால மோசமான தாக்கத்தினைச் சரியான முறையில் எதிர்வுகூறுவதனையும் சவாலாக்குகிறது. இதற்கமைய, கண்காணிப்பு செறிவுபடுத்தப்பட்டதுடன் வங்கிகள் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைந்த செயற்படாக் கடன்களில் ஏற்படும் மேலதிக அதிகரிப்புக்கள் பற்றி மேலும் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமென்பதுடன் தொடர்பான அனைத்து இடர்நேர்வுகளையும் தணிப்பதற்குப் பொருத்தமான இடர்நேர்வுப் பொறிமுறை நடைமுறைக்கிடப்பட்டிருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

- **வங்கிகளின் மூலதன மட்டங்கள் குறைந்தபட்ச நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு மேல் தொடர்ந்திருக்கும் மற்றும் அதிகரித்த குறைந்தபட்ச மூலதன மட்டங்களை எய்துவதற்கான இறுதித் திகதி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு 2020 இறுதியிலிருந்து 2022 இறுதிவரை ஒரு ஆண்டினால் தள்ளிவைக்கப்பட்டது.** 2017 இலிருந்து அழுத்த காலப்பகுதியில் பயன்படுத்தக்கூடிய மூலதனங்களைக் கட்டியெழுப்புமாறும் பாசல் III மூலதனப் போதுமை விகிதம், பாசல் III முடுக்கி விகிதம், புதிய கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்-9: நிதியியல் சாதனங்கள் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் அவை வங்கிகளின் மூலதன மட்டங்களில் அதிகரிப்புக்களைத் தோற்றுவித்திருக்கின்றன. இது, நிதியியல் மற்றும் பொருளாதார அழுத்தங்களிலிருந்து தோன்றுகின்ற அதிர்வுகளை ஈர்த்துக் கொள்வதற்கும் இனிவரும் ஆண்டுகளில் உண்மைப் பொருளாதாரத்திற்கு நிதியியல் துறையிலிருந்து கசியக்கூடிய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் வங்கித்தொழில் துறையின் இயலாற்றலை மேம்படுத்துதற்கு இயலச்செய்யும். இவ்வபிவிருத்திகளின் காரணமாக உத்தேச குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் சிறிய வங்கிகள் வியாபார ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படவுமுள்ளன.

- **வங்கிகளின் திரவ நிலைமைகள் ஆரோக்கியமான மட்டங்களில் தேவைப்படுத்தப்பட்ட திரவப் பாதுகாப்பு விகிதம் மற்றும் தேறிய உறுதித்தன்மை நிதியிடல் விகிதம் என்பனவற்றிற்கு மேலதிகமாக தாங்கிருப்புடன் பேணப்படல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.** எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் உருவான அசாதாரண சவால்களை உரிமம்பெற்ற வங்கிகள் எதிர்நோக்குவதற்கான நெகிழ்ச்சித்தன்மையினை வழங்கும் பொருட்டு திரவத்தன்மை பாதுகாப்பு விகிதத்தினதும் தேறிய உறுதித்தன்மை நிதியிடல் விகிதத்தினதும் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் விகிதம் 100 சதவீதத்திலிருந்து 90 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. மேலும், நியதி திரவத்தன்மை சொத்து விகித்தினை கணிக்கும் நோக்கத்திற்காக குறிப்பிட்ட சொத்துக்கள் திரவச் சொத்துக்களாகத் தீர்மானிக்கப்பட்டதுடன் உரிமம்பெற்ற வங்கிகளும் இத்தளர்த்தல்களை அவர்களது வாடிக்கையாளர்களினதும் பொருளாதாரத்தினதும் நலவுரித்துக்களைப் பெருமளவிற்குப் பேணும் விதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் நன்மைகள் வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் பயனுறுதலும் வேண்டும். அதேநேரம், இலங்கை மத்திய வங்கி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதங்கள் மற்றும் ஏனைய வழிமுறைகளைப் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை இடர்நேர்வு சொத்துப்பட்டியலுக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான மாற்றங்களைக் கவனத்தில் கொண்டு அவற்றின் திரவத்தன்மை நிலைமையினை மிக நெருக்கமாகக் கண்காணிக்கும்.

- **உண்மைப் பொருளாதாரத்திலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகள் எதுவும் வங்கித்தொழில் துறைக்கு கசிவதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ஏதேனும் மோசமான சூழ்நிலைகளை அடையாளம் காண்பதற்காக பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் கண்காணிக்கப்படும்.** தேவையாயின் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டிற்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூய ஏதேனும் இடர்நேர்வுகள் தொடர்பில் முன்கூட்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக தேவையாயின் பொருத்தமான பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும். உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு காத்திரமான வங்கித்தொழில் மேற்பார்வை தொடர்பான பாசல் மையக் கோட்பாடுகள் மற்றும் ஏனைய மிகச் சிறந்த பன்னாட்டு நடைமுறைகள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் மேலும் வலுப்படுத்தப்படும்.

- **உரிமம்பெற்ற வங்கிகளின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பானது புதிய வங்கித்தொழில் சட்டத்தினை வரைவதனூடாக மேலும் வலுப்படுத்தப்படும்.** உத்தேச புதிய வங்கித்தொழில் சட்டத்திற்குள் காரணிப்படுத்தப்பட வேண்டிய முக்கிய துறைகளாக மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான ஒன்றுதிரண்ட பொறுப்பாணை, விகிதசமத் தன்மைக்கு வசதியளிக்கும் விதத்தில் வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்தலானது கட்டமைப்பானது கூட்டாண்மை ஆளுகையினை வலுப்படுத்தல், செறிவடைந்த மேற்பார்வை, தீர்மானம், நாணயத் தண்டங்கள்/ குற்றப்பணங்களை விதித்தல், இடர்நேர்வுகள் பரவுவதைத் தணிப்பதற்காக வங்கிகளை வெவ்வேறாக்குதல், ஒன்றுடனொன்று இணைக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை வலுப்படுத்தல், கையேற்பு மற்றும் திரட்சிப்படுத்தல், பாரிய வெளிநாட்டு வங்கிகளைப் பிரித்தல் மற்றும் தேவையெனக் கருதப்படுமிடத்து வங்கிகளுக்காக நிதியியல் உடைமைக் கம்பனி அமைப்பினை அறிமுகப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

- **மேற்பார்வை, தரமிடல் மாதிரி (வங்கி உறுதித்தன்மை தரமிடல் குறிகாட்டி), மத்திய வங்கியினால் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டிருக்கிறது.** இது, வினைத்திறன், காத்திரமான தன்மை மற்றும் தனிப்பட்ட வங்கிகளினதும் வங்கித்தொழில் துறையினதும் உறுதித்தன்மை என்பனவற்றை அதிகரிப்பதற்கு மத்திய வங்கிகளின் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக் கட்டமைப்பிற்கு பலப்படுத்தும். அதேவேளையில், வங்கிகளை நேரகாலத்துடன் சரிசெய்யும் நடவடிக்கைகளையும் தலையீடுகளையும் இயலுமைப்படுத்தும்.

- **பரவும் இடர்நேர்வுகளிலிருந்து வங்கிகளைப் பாதுகாப்பதற்கான தேவையினைப் பரிசீலனையில் கொண்டும் வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மை மற்றும் நிதியியல் முறைமைகளின் உறுதிப்பாட்டினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்தும் பொருட்டும் வங்கித்தொழில் குழுமங்களின் ஒன்றுதிரண்ட மேற்பார்வை மேற்கொள்ளப்படும்.** இதற்கமைய, ஒன்றுதிரண்ட மேற்பார்வை மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளதுடன் இது தொடர்பான ஏற்பாடுகள் வங்கித்தொழில் சட்டத்திற்குள் கொண்டு வரப்படவுமுள்ளது.

- **பாரிய வர்த்தக வங்கிகள் பிராந்திய விரிவாக்கங்களுக்கு வழியமைப்பதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவோரிடையேயும் எல்லைகடந் மேற்பார்வையிடையேயும் தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படுவதனை அதிகரிக்கும் நோக்குடன் ஏனைய பிராந்திய ஒழுங்குமுறைப்படுத்துநர்களுடன் தொடர்ந்தும் நெருக்கமான தொடர்புகளை மேற்கொள்ளவதற்கும் தொடர்ந்தும் ஊக்குவிக்கப்படும்.**

- **சைபர் பாதுகாப்பில் அதிகரித்துக் காணப்படும் இடர்நேர்வுகளைக் கருத்தில் கொண்டு, பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கிகளின் சைபர் பாதுகாப்பினை அதிகரிப்பதற்கு நாணயச் சபையின் ஒப்புதலுடன் ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பிற்கு மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்படும்.** உத்தேச ஒழுங்குவிதிகள் வங்கிகள் அவற்றின் தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியலின் தாக்குப்பிடிக்கும் ஆற்றல்களை தரமுயர்த்தவும் வலுப்படுத்தவும் தூண்டும்.

- **பின்டெக்கினால் தூண்டப்பட்ட உயர் வினைத்திறன் கொண்ட மாற்று வங்கித்தொழில் சாதனங்கள் மற்றும் பணிகள் அதேபோன்று கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட சவால்கள் என்பனவற்றின் காரணமாக வங்கிகளின் பாரம்பரிய வியாபார மாதிரிகள் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான காலப்பதியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்குட்படக்கூடும்.** உலகளாவிய நோய்த்தொற்றின் சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு நிதியியல் வசதிக்குட்படுத்துவதனை அதிகரிப்பதனையும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதனையும் நோக்கமாகக் கொண்ட செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் மற்றும் இணையத்தள வங்கித்தொழில் போன்ற முன்னெடுப்புக்களினூடாக வங்கித்தொழில் பணிகளை அணுகும் தன்மையை உயர்த்துவதற்காக இவ்வங்கிகள் வழிமுறைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், வங்கிகளில் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கான முன்கூட்டிய வழிமுறைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு எதிர்கால ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை அணுகுமுறைகளை

மேற்கொள்வது அவசியமாகவுள்ள அதேவேளையில் இத்தோற்றம்பெற்று வரும் வியாபாரங்களுக்கும் தொழிற்பாட்டு மாதிரிகளுக்கும் வசதியளிப்பதும் இன்றியமையாததாகும்.

- **முன்னோக்கிச் செல்கையில் எதிர்கால நெருக்கடிகளுக்குத் தயாராக இருப்பதும் மோசமான சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கு வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மீட்சித் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலூடாக மேலும் வலுப்படுத்தப்படல் வேண்டும்.** பிரச்சனைக்குரிய வங்கிகள் மீதான மோசமான தாக்கங்கள் மற்றும் நிதியியல் துறைக்கான அவற்றின் கசியும் தாக்கங்கள் என்பனவற்றைக் குறைக்கும் பொருட்டு மீட்புத் திட்டங்களை நடைமுறைக்கிடுமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படும். இது தொடர்பில் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக இரண்டு ஆலோசனைப் பத்திரங்கள் வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. வங்கிகளினால் மீட்புத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்ற வங்கித்தொழில் பணிப்புரைகளை வருங்காலத்தில் விடுப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- **மத்திய வங்கி இலங்கையில் உறுதித்தன்மை வாய்ந்த நிதிக்காக வழிகாட்டலொன்றை 2019 ஏப்பிறல் 10ஆம் நாளன்று வெளியிட்டதுடன் இவ்வழிகாட்டலானது சூழ்நிலையினைக் காத்திரமான முறையில் முகாமைப்படுத்தல், அவர்கள் நிதியிட்ட செயற்றிட்டங்களுடன் இணைந்து காணப்படும் சமூகம் மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை முகாமை செய்தல் மற்றும் பசுமை, காலநிலை சிநேகபூர்வ மற்றும் சமூகவியல் சார்ந்த வியாபாரங்களுக்கு அதிகரித்தளவில் உதவுதல் என்பனவற்றினை காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவதற்காக நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் பரந்தளவு நெறிப்படுத்தல்களை வழங்குகிறது.** தற்பொழுது இலங்கை மத்திய வங்கி உறுதித்தன்மை வாய்ந்த நிதியியல் வகைப்படுத்தல் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான அறிக்கையிடல் தேவைப்பாடுகள் என்பனவற்றினை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டு வருகிறது.

- **பொருளாதார நடவடிக்கைகளுக்குப் புத்துயிரளித்தல் மற்றும் புதிய வழமைக்குத் திரும்புதல்.** வங்கிகளின் மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்களை வலுப்படுத்துவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் முயற்சிகளையும் கொவிட்-19 காரணமான அதிவிசேடத்துவம் வாய்ந்த கொள்கைகளையும் பரிசீலனையில் கொண்டு இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கம்பனி ஆளுகைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற முன்னேற்றங்கள், உரிமம்பெற்ற வங்கிகளின் அதிகரித்த மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு என்பன வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் உறுதித்தன்மையினைப் பேணும் எனவும் உண்மைப் பொருளாதார வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் எதிர்காலத்தில் பாதுகாக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

- **கொவிட்-19 இற்கு மத்தியிலும் மத்திய வங்கி அதன் வழமையான மேற்பார்வை அணுகுமுறைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும்.** இதற்கமைய, புதிய வழமைக்கேற்றவாறு மத்திய வங்கி அதன் தலத்திலான மேற்பார்வை நடவடிக்கைகளை தேவையானவிடத்து அதிகாரிகளினால் விடுக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களைப் பரிசீலனையில் கொண்டு தூர இருந்து கொண்டே மேற்பார்வைகளை மேற்கொள்ளும். ஆகவே, தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைச் செயன்முறைகள் மேலும் வலுப்படுத்தப்படும். இது, மத்திய வங்கி தோன்றக்கூடிய இடர்நேர்வுகளை அடையாளம் காணவும் கண்காணிக்கவும் தேவையானவிடத்து வங்கிகளின் முகாமைத்துவச் செயன்முறையில் காணப்படும் ஏதேனும் குறைபாடுகளுக்கு தீர்வுகளை வழங்கவும் உதவும். எனவே, ஒழுங்குமுறைப்படுத்தல் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு இலத்திரனியல் மீது அதிகளவிற்கு தங்கியிருக்க வேண்டுமென்பதுடன் உரிமம்பெற்ற வங்கிகள் மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கு இணங்க சரியான நேரத்தில் துல்லியமாக தரவுகளைச் சமர்ப்பிப்பதனை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படவுள்ளன. மேலும், இதனை அடையும் விதத்தில் நிலவக்கூடிய ஏதேனும் நிலைமையின் அடிப்படையில் சமூக இடைவெளி விதிகள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் தொடர்பான தேவைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு நேரடியாகக் கலந்து கொள்ளும் கூட்டங்களை விட மெய்நிகர் கூட்டங்களை வங்கிகளின் முகாமைத்துவத்துடன் நடத்தும்.

- **தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில்**

**செய்யப்படுகின்ற மாற்றங்கள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் உறுதிப்பாட்டினை நடுத்தர காலப்பகுதியில் மேலும் வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தீர்மானக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு நிதித்தொழில் சட்டத்திற்கு மாற்றங்கள் முன்மொழியயப்பட்டுள்ளன. மேலும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகளின் தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மீளாய்வு செய்யப்பட்டு தற்போதுள்ள சந்தை அபிவிருத்திகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் முழுமையானதொரு நோக்குடன் ஒழுங்குமுறைப்படுத்தப்படும்.

- **அதிகரிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளின் விளைவாக மூலதனத்தினைக் கட்டியெழுப்புவதன் மூலம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் மூலதன மட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரிப்பதன் மூலமும் புதிய மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் மூலதன மட்டங்களை அடுத்த ஒரு சில ஆண்டுகளில் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.** துறையின் அதிகரிக்கப்பட்ட மூலதன மட்டங்கள் அழுத்த காலப்பகுதிகளில் இயலாற்றலின் அதிர்வுகளை ஈர்த்துக் கொள்ளும் தன்மையை மேம்படுத்தும்.

- **உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான பொருத்தமான தீர்மானக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு அண்மைய எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.** நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இடர்ப்பாட்டிலுள்ள/ உயர் இடர்நேர்வுக் கம்பனிகளை தீர்ப்பதற்கு தற்பொழுது ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உரிமம் இரத்துச் செய்யப்பட்ட/ வியாபாரம் இடைநிறுத்தப்பட்ட நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களது கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்கின்ற செய்முறைகள் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்திற்கு கூடாகத் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில் காணப்படும் பலயீனமான தன்மைகளை உரிய நேர அடிப்படையில் அடையாளம் காண்பதற்கு பொருத்தமான சீர்செய்யும் நடவடிக்கைத் திட்டமொன்றின் மீது வழிகாட்டலொன்று விடுக்கப்படவிருப்பதுடன் வைப்பாளர்களின் நம்பிக்கையினை வலுப்படுத்தும் பொருட்டு விரும்பத்தக்க சீர்செய்யும் நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கப்படவுள்ளதுடன் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்திற்கும் பொதுமக்களுக்கும் ஏற்படக்கூடிய சாத்தியமான முறிவுகளின் செலவுகளையும் குறைக்கும்.

- **தாக்குப்பிடிக்கக்கூடியதும் நன்கு செயலாற்றத்தக்கதுமான 25 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை உருவாக்குவதற்கு முதன்மைத் திட்டமொன்றினை அபிவிருத்தி செய்து நடுத்தர காலப்பகுதியில் அமுல்படுத்துதல்.** வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையிலுள்ள பலயீனங்களையும் இடர்நேர்வுகளையும் கட்டுப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி வலுவானதும் உறுதியானதுமான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வியாபார மாதிரிகளுடன் ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் குறைந்தபட்ச முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் மேலே கொண்டுள்ள ஒவ்வொன்றையும் நடுத்தர கால ஒன்றிணைத்தல் திட்டமொன்றினை முன்மொழிந்தது. இது, நாட்டின் பொருளாதாரத் தேவைகளுக்கு காத்திரமான முறையில் பங்களிக்கும்.

- **அதிகாரம்பெற்ற வணிகர்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணிக்கின்ற முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்கனவே முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.** இது நடைமுறைப்படுத்தப்பட்டதும் இக்கண்காணிப்புப் பொறிமுறை வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் என்பன மீதான அனைத்துத் தரவுகளையும் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் மூலம் கொள்கை வடிவமைப்பினைப் பாதிக்கின்ற ஏதேனும் தரவு இடைவெளிகளை நிரப்பிக் கொள்ள முடியும்.

- **முன்மொழியப்பட்டுள்ள வங்கித்தொழில் சட்டம் மற்றும் சிறந்த பன்னாட்டு நடைமுறைகள் என்பனவற்றின் நியதிகளில் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்திற்கு ஏற்புடைத்தான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.** தற்பொழுது இடம்பெற்றுவரும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை 2021இன் முதல் காலாண்டுப்பகுதியில் நிறைவுசெய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும். தரவுத்தளம் பேணப்படுவதனையும் திட்டத்தின் காத்திரமான தன்மை மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு தவிர்க்க முடியாததாக விளங்கும் ஏனைய முறைமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் திணைக்களங்களின் உதவியுடன் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் உறுப்பு நிறுவனங்களின் தலத்திலான மேற்பார்வையினை நடத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுதுள்ள சட்டக் கட்டமைப்பின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தீர்மான வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

- **தடைசெய்யப்பட்ட திட்டங்களையும் அதையொத்த நிதியியல் ஏமாற்றுக்களையும் பற்றி மேலும் புலன்விசாரணைகளை நடத்துவதற்காக தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளும்.** இந்நிதியியல் மோசடிகளை ஒழிப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் பாடசாலைப் பிள்ளைகள், அரச அலுவலர்கள் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் ஆகியோர் உட்பட பொதுமக்களின் அறிவினை அதிகரிக்கும் நோக்குடன் மோசடியான இத்திட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

- **உலக வங்கிக் குழுமத்தின் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்ட தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை 2020இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் உத்தியோகபூர்வமாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.** தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை நாடு முழுவதும் மேம்படுத்துவதற்கான கூடியளவு காத்திரமானதும் வினைத்திறன் மிக்கதுமான செயற்பாடுகளை அடையாளம் கண்டு ஊக்குவிப்பதேயாகும். நாட்டின் நிதியியல் அறிவினை உயர்த்துவதற்கான அபிவிருத்தி உபாயங்களுக்கான அடித்தளமாக கண்டறியப்பட்டனவற்றைப் பயன்படுத்தும் குறிக்கோளுடன் நாட்டில் நிதியியல் அறிவின் மட்டத்தினைப் புரிந்து கொள்வதற்கு 2020ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுப் பகுதியில் இலங்கைக்காக முதற்றடவையாக நிதியியல் அறிவு அளவீடொன்றினை மத்திய வங்கி மேற்கொள்ளும்.